திருவும் தெள்ளிய அறிவும்

# நகரத்தார் குரல்

சமூக இலக்கிய மாத இதழ்

பிப்ரவரி 2000

ஆசிரியர்
வி.என். சிதம்பரம்





"கவியரசு கண்ணதாசன், பாரிஸ்டர் வள்ளல் அழகப்ப செட்டியார் ஆகியோரின் அஞ்சல்தலை வெளியிட வேண்டும்."

வலையபட்டி PL.A. சிதம்பரம் பேட்டி

# நகரத்தார் குரல்

சமூக இலக்கிய மாத இதழ்

குரல் 19 பிரமாதி பிப்ரவரி
ஒலி 1 மாசி 2000

ஆசிரியர்
வி.என். சிதம்பரம் செட்டியார்



தமிழ்நாடு பஸ் உரிமையாளர் சங்க துணைத் தலைவர், தமிழ்நாடு மொத்த மருந்து வணிக சங்கத்தலைவர், தமிழ் மாநில காங்கிரஸின் தஞ்சை நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டவர், தொழிலிலும் அரசியலிலும் சாதனை படைக்கும் வலையபட்டி PL.A. சிதம்பரம் அவர்களோடு ஒரு சந்திப்பு...

உள்ளே . . .



108–109, நேதாஜி சாலை, அறை எண். 12, மாடி
மதுரை – 625 001. தொலைபேசி: 746206

## 19ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் குரல்...



நகரத்தார்குரல் ஆயிரக்கணக்கான வாசகர்களின் நல்ஆதரவோடு சமூக, இலக்கியப்பணியினை செவ்வனவே ஆற்றி நடை போட்டு வருகிறது. பிப்ரவரி 2000 மாதத்திலிருந்து பத்தொன்பதாம் அகவையில் அடியெடுத்து வைக்கிறது. வாசகர்களும், படைப்பாளிகளும், விளம்பரதாரர்களும் எப்போதும் போல் இனிமேலும் தொடர்ந்து ஆதரவை நல்கிட வேண்டுகிறேன்...

- **ஆசிரியர்**

## புகைப்படம் . . .

**15** பேர்களைச் சந்தாதாரர்களாக சேர்த்துக் கொடுக்கும் அன்பரின் புகைப்படத்தை வெளியிடுவதோடு ஓராண்டுக்கு அவர்களுக்கு இலவசமாக **நகரத்தார் குரல்** அனுப்பி வைக்கப்படும். 15 சந்தா சேர்த்து அனுப்புபவர்கள் உங்களின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படமும் அனுப்பி வையுங்கள்.

## வாசகர்களே!

நம் நகரத்தார்களில் வள்ளல்கள், பிரபலங்கள், அரசியல்தலைவர்கள், கலைஞர்கள் இவர்களுடன் நம்மவர்கள் பற்றிய பழைய அரிய புகைப்படங்கள், அவர்களைப் பற்றிய கட்டுரைகள், துணுக்குகள் தங்களிடம் நிச்சயம் இருக்கும். அவற்றை நகரத்தார்குரலுக்கு அனுப்பி வையுங்கள். அரியனவற்றைத் தேர்ந்தெடுத்து வெளியிடுகிறோம்.

## ஆச்சிமார்களே...!

செட்டிநாட்டுச் சுவையான **'சமையற் குறிப்புகள்'** பகுதி வெளிவந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து ஆச்சி மார்களும், சமையல்கலை வல்லுனர்களும் உடனே எழுதுங்கள்.

## 1-4-99 முதல் புதிய கட்டணம்

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா (உள்நாடு) | ரூ. | 60.00 |
| ஆண்டு சந்தா (வெளிநாடு) | ரூ. | 600.00 |
| ஆயுள் சந்தா (உள்நாடு) | ரூ. | 500.00 |
| ஆயுள் சந்தா (வெளிநாடு) | ரூ. | 3000.00 |

### விளம்பரக்கட்டணம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை (கலர்) | ரூ. | 3000.00 |
| உள் அட்டை (கலர்) | ரூ. | 2000.00 |
| முழுப்பக்கம் | ரூ. | 1000.00 |
| அரைப்பக்கம் | ரூ. | 500.00 |
| கால் பக்கம் | ரூ. | 250.00 |
| படத்துடன் செய்தி | | |
| முழுப்பக்கம் | ரூ. | 1200.00 |
| " " அரைப்பக்கம் | ரூ. | 600.00 |
| " " கால்பக்கம் | ரூ. | 300.00 |
| வரி விளம்பரம் 3 வரிக்கு | ரூ. | 180-00 |

தொகை M.O. D/D. மூலமாக அனுப்பலாம். D/D. M.O அனுப்புபவர்கள் **"Nagarathar Kural"** என்ற பெயரில் அனுப்ப வேண்டும். தபால் செலவு, பேப்பர் செலவுகள் அதிகரித்து விட்டதால் கட்டணங்களை உயர்த்தும் சூழ்நிலை ஏற்பட்டது. வாசகர்கள், விளம்பரதாரர்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டுகிறோம்.

- **ஆசிரியர்**

## ஆசிரியர் பக்கம்

# பெருமைக்குரிய நகரத்தார்

நாதசுரக் கலைஞர் எல்லோரும் பட்டுக்கரை வேட்டி, விரல்களில் மோதிரம், கழுத்தில் தங்கச்சங்கிலி போன்ற ஆபரணங்களோடு ஆடம்பரமான கலைஞர்களாக வித்வான்கள் காட்சியளிப்பதைப் பார்க்கிறோம். வசதிக்குத் தக்கபடி ஆபரணங்கள், மேலாடைகள் இருக்குமே தவிர ஆனால் கௌரவமான வித்வான்களின் "கெட்டப்" கொஞ்சம்கூட மாறாது, குறையாது.

ஆனால் இது இன்று வித்வான்பாணி உடையலங்காரங்கள் ஆகிவிட்டது. ஆனால் சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் அதாவது 1924களில் கானாடுகாத்தானில் நடந்த ஒரு சுயமரியாதைப் புரட்சியினால்தான் வித்வான்களுக்கு மேலாடையும், கௌரவமும் கிடைத்தது என்பதை அங்கு நடந்த ஒரு புரட்சிகரமான நிகழ்வின் சுவடுகளைப் பார்ப்போமா...?

கானாடுகாத்தானில் நமது நகரத்தாரைச் சேர்ந்த பெரும் செல்வந்தர் வீட்டுத்திருமணம். 1924களில் நாதசுரக் கலைஞர்களில் பெரும்புகழோடு விளங்கியவர் சிவக்கொழுந்து என்பவர். அந்தச் சிவக்கொழுந்துவின் நாதசுரக் கச்சேரியை திருமணவீட்டார் ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்தக் காலத்தில் நாதசுரக்கலைஞர் தோளில் துண்டுகூட போடக்கூடாது என்னும் எழுதப்படாத சட்டம் வித்வான்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. எவ்வளவு பெரிய இசை வித்வான்களுக்கும் இந்தச்சட்டம் பொருந்தும்.

இந்த எழுதப்படாத சட்டத்தை சுயமரியாதை எதிர்ப்பாளர்களும் பெரும் செல்வந்தர்களுமே இந்த விதியை விதித்திருந்தார்கள் என்பது அன்றைய செய்தி.

அந்தத் திருமணத்தன்று தந்தை பெரியார் அவர்களும், டாக்டர். பி. வரதராஜுலு, ஓ.வி. தியாகராசர், பட்டுக்கோட்டை அழகிரி ஆகியோர் கானாடுகாத்தானில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தளபதிகளில் ஒருவராக விளங்கிய வை.சு. சண்முகம் செட்டியார் இல்லத்திற்கு வேறொரு காரணமாக வருகை தந்திருந்தனர்.

பட்டுக்கோட்டை அழகிரியாரோ நாதசுரப்பிரியர். எங்கு நாதசுரக் கச்சேரி நடப்பதாகக் கேள்விப்பட்டாலும் அங்கு சென்று விடுவாராம்.

மிகப்பெரிய வித்வான் சிவக்கொழுந்து திருமணவீட்டில் கச்சேரி செய்கிறார் என்பதைக் கேள்விப்பட்டதும், கலாரசிகரான பட்டுக்கோட்டையார், சிவக்கொழுந்துவைப் பற்றி நிறைய கேள்விப்பட்டுள்ளதாலும், அவரின் ரசிகராக அந்தத்திருமண வீட்டிற்குச் சென்றிருந்தார்.

மணவிழா ஊர்வலம் நடந்து கொண்டிருக்கிறபோது சிவக்கொழுந்து வியர்வையைத் துடைப்பதற்காக சிறுதுண்டை தோளில் அணிவித்திருந்ததைப் பார்த்த பெரும் செல்வந்தரான ஓர் இளைஞர் சிவக்கொழுந்துவிடம் சென்று "தோளில் இருக்கும் துண்டை எடுத்துவிட்டு நாதசுரம் வாசி இல்லையெனில் உன்னை வாசிக்க விடமாட்டேன்" என்றிருக்கிறார். அருகில்

நின்ற பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள் சிவக்கொழுந்துவிடம் சென்று, "நீங்கள் துண்டை எடுக்காமல் வாசியுங்கள். கேட்பவர்கள் கேட்கட்டும். இல்லையெனில் நடையைக் கட்டட்டும்" என்று தன் கம்பீரக்குரலில் சொல்லியிருக்கிறார். அந்த இளைஞரோடு உறவினர்களும் சேர்ந்து கொள்ள வாக்குவாதங்கள் முற்றி ஊர்வலம் நடுவழியில் நின்றது.

பட்டுக்கோட்டை அழகிரி திருமண வீட்டில் கலாட்டா செய்து குழப்பம் விளைவிக்கிறார் என்று வை.சு. சண்முகம் செட்டியார் வீட்டிலிருந்த பெரியாருக்கு தகவல் பறந்தது.

தந்தை பெரியார் அவர்களோடு வை.சு. சண்முகம் செட்டியார் அவர்களும் புறப்பட்டு வாக்குவாதம் நடந்து கொண்டிருந்த இடத்திற்கு விரைந்து வந்தனர். பெரியாருக்கும், வை.சு. சண்முகம் செட்டியாருக்கும் விபரம் புரிந்துவிட்டது. வாக்குவாதங்களுக்கான காரணம் அறிந்ததும் வை.சு. சண்முகம் செட்டியாருக்கு கோபம் வந்துவிட்டது.

பெரியாரை அருகில் வைத்துக்கொண்டு அவரின் முன்னிலையிலேயே தோளில் துண்டு போடக்கூடாது என்று சொன்ன அந்த இளைஞரை அழைத்து, "இவர் துண்டு போடக்கூடாது என்று சொல்வதற்கு நீ யார்...? பணத்திமிரில் இப்படி எல்லாம் பேசுகிறாயா? சிவக்கொழுந்து வாசித்தால் மேல் துண்டோடு தான் வாசிப்பார். இதில் எந்த மாற்றமும் இல்லை" என்று கோபக்குரலை எழுப்பி வை.சு. சண்முகம் செட்டியார் வாதிட மணவீட்டாரும் ஏதும் பிரச்சனைகள் வந்துவிடும் என்று சிவக்கொழுந்து அவர்கள் விருப்பப்படி தோளில் துண்டு போட்டே வாசிக்கட்டும். யாரும் எதுவும் பேசவேண்டாம். இருப்பவர்கள் இருங்கள். விருப்பம் இல்லாதவர்கள் செல்லுங்கள் என்று வை.சு.ச.வுக்கும் ஆதரவாக குரல் எழுப்ப அந்த மேல்துண்டுப் பிரச்சனையை கிளப்பிய கும்பல் கலைந்து சென்றதாம்.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

என அய்யன் வள்ளுவனார் நட்பின் இலக்கணத்தை வெளிக்காட்ட உணர்த்திய குறள்.

உடுக்கையே ஒரு சுயமரியாதைப் பிரச்சனையான காலத்தில் அதை முன்னின்று எதிர்த்தவர் நமது வை.சு. சண்முகம் செட்டியார் அவர்கள் என்பதை நினைத்து நினைத்து நான் பெருமையடைகிறேன்.

அன்றிலிருந்து மேல்துண்டுகளுக்குப் பதிலாக பட்டாடைகள், சால்வைகளை வித்வான்கள் போட்டியாக அணியத் தொடங்கினார்கள்.

அந்த மேலாடைகள் எல்லாம் வை.சு. சண்முகம் செட்டியார் அவர்கள் செய்த சுயமரியாதைப் புரட்சியால் விழுந்தது என்பதை எத்தனை வித்வான்கள் அறிவார்கள்...!



## வாரியாருக்கு ஆலயம்

திருமுருக கிருபானந்த வாரியாருக்கு நாமக்கல் மாவட்டம் ரெட்டியபட்டி கந்தகிரியில் ஆலயம் அமைத்து ஐம்பொன்சிலை நிறுவி நித்திய பூஜை செய்யப்பெற்று வருகிறது.

அறிவார்ந்த வாரியாரின் தொண்டர்களின் ஏற்பாட்டைப் பார்த்தீர்களா...?

# வெற்றியின் இரகசியம்!

- - - - - தென்கச்சி கோ. சுவாமிநாதன் - - - - -

## முன் உதாரணம்

ஒரு தேசத்தில் ஒரு மன்னர் இருந்தார். அவரிடத்தில் ஓர் அமைச்சரும் இருந்தார். அவர் தலைமை அமைச்சர்.

அப்படி இருந்தபோதிலும்கூட அவர் ஒரு குடிசையிலேதான் வாழ்ந்து வந்தார் குளிர்காலம் வந்தது.

ஊரில் இருக்கிற ஏழைமக்கள் எல்லோரும் குளிரால் மிகவும் துன்பப்பட்டார்கள். இதைக் கேள்விப்பட்டார் மன்னர்.

உடனே நடவடிக்கைகளில் இறங்கினார். நிறைய கம்பளிப்போர்வைகள் வாங்கினார். தலைமை அமைச்சரிடம் ஒப்படைத்தார். இதை எல்லாருக்கும் விநியோகம் செய்துவிடுங்கள் என்று உத்தரவு போட்டார்.

போர்வைகள் எல்லாம் அமைச்சரின் குடிசைக்கு வந்து சேர்ந்தன. குடிசையில் ஒரு பக்கமாக அவையெல்லாம் அடுக்கி வைக்கப்பட்டன.

இன்னும் விநியோகம் செய்யப் படவில்லை. இந்த சமயம் பார்த்து அந்த ஊரில் இருந்த சில திருடர்களுக்கு ஒரு யோசனை வந்தது.

மன்னர் கொடுத்தனுப்பிய கம்பளிப் போர்வைகள் எல்லாம் அமைச்சரின் குடிசையில்தானே கிடக்கும். இன்றைக்கு இரவு எல்லாரும் தூங்கியபிறகு அங்கே போய் அவற்றையெல்லாம் கொள்ளை அடித்துக் கொண்டு வந்து விடலாம். பிறகு வேறு ஊர்களுக்கு அவற்றைக் கொண்டு சென்று விற்றுக் கொள்ளலாம் என்ற திட்டம் போட்டார்கள்.

அதன்படி அன்று இரவே அந்த அமைச்சரின் குடிசைக்குப் போனார்கள். அமைதியாக உள்ளே நுழைந்தார்கள். அங்கே பார்த்தார்கள்.

ஒருபக்கம் கம்பளியெல்லாம் குவிந்து கிடக்கின்றன. இன்னொருபக்கம் அந்த அமைச்சரும் அவருடைய தாயாரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். தரையிலே ஒரு பழைய பாயை விரித்து கிழிந்துபோன ஒரு பழைய கம்பளித்துணியால் போர்த்திக் கொண்டு அவர்கள் தூங்குகிறார்கள் கம்பளி பூராவும் கிழிசல்மயம். அதன் காரணமாக குளிரில் அவர்கள் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

திருடர்களுக்கு அதைப் பார்த்ததும் ஆச்சரியம்!

"என்ன இது? ஒரு பக்கம் இவ்வளவு புதுக்கம்பளிகள் குவிந்து கிடக்கு. அதையெல்லாம் விட்டுட்டு கிழிந்துபோன ஒரு கந்தல் கம்பளியைப் போர்த்திக்கிட்டு... நடுங்கிக்கிட்டுக் கிடக்கறாங்களே!" என்கிற ஆச்சரியம்...

அவர்கள் வந்த காரியத்தையும் மறந்தார்கள். அமைச்சரை எழுப்பினார்கள்.

"ஐயா!... கொஞ்சம் எழுந்திரிங்க!"

அவர் எழுந்து உட்கார்ந்தார் இவர்களைப் பார்த்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

இவர்கள் பேசினார்கள்.

"ஐயா... நாங்கள் எல்லாரும் திருடர்கள். நாங்க கம்பளிப்போர்வைகளைத்

திருடுவதற்காகத்தான் இங்கே வந்தோம். ஆனா உங்க நிலைமையைப் பார்த்ததும் எங்களுக்கு ஒரு சந்தேகம். அதைக்கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்பதற்காகத்தான் உங்களை எழுப்பினோம்."

"என்ன சந்தேகம் உங்களுக்கு?" என்றார் அமைதியாக.

"உங்க குடிசைக்குள்ளே ஒருபக்கம் நல்ல கம்பளியெல்லாம் குவிஞ்சு கிடக்கு. அதை விட்டுட்டு ஓட்டைக்கம்பளியாலே உடம்பை மூடிக்கிட்டுக் கிடக்கறீங்களே? எதுக்காக இப்படி சிரமப்படணும்?"

அமைச்சர் சொன்னார். "அந்தக் கம்பளிகளை நான் எடுத்தேன்னா நானும் உங்களை மாதிரித்தானே!"

இவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்துக்கொண்டே நின்றார்கள். அவர் தொடர்ந்தார்.

"நான் வச்சிருக்கிறது கிழிந்துபோன கம்பளி... இதுமாதிரி கிழிந்துபோன கம்பளிகூட இல்லாத ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கறதுக்காக மன்னர் கொடுத்தனுப்பியிருக்கிற கம்பளிகள் அதெல்லாம்! அந்த ஏழைகள்தான் இந்தப் புதுக்கம்பளிக்குச் சொந்தக்காரர்கள்! அதை எடுத்து நான் போர்த்திக்கொண்டால் நானும் திருடன் என்றுதான் ஆகும்! அதனாலே நான் அதை எடுக்கமாட்டேன்."

அந்தத்திருடர்கள் மனதில் முள்குத்தியது போல உணர்ந்தார்கள்.

அமைச்சரை கண்கலங்கப் பார்த்தார்கள்.

"ஐயா! எங்களை மன்னித்து விடுங்கள் இனி நாங்கள் திருடவே மாட்டோம்" என்று சொல்லி விட்டுப் போனார்கள்.

வாசகர்களே!

எங்கே நடக்கும் இந்த அதிசயம் என்றுதானே யோசிக்கிறீர்கள்?

அந்த அமைச்சரின் பெயர் சாணக்கியர் மன்னர் பெயர் சந்திரகுப்தர்.

உயர்ந்த பதவியிலே இருக்கிறவர்களுடைய முன்உதாரணம் தான் அடிமட்டத்திலே உள்ளவர்கள் மனதைத் தூய்மைப்படுத்தணும்.

இந்தக்காலம் அப்படியா இருக்கிறது?

ஒருத்தர் வீட்டில் திருட்டுப் போய்விட்டது.

பறி கொடுத்தவர் ரொம்பவும் கோபமாக இருந்தார். "பரவாயில்லை விடுங்க. எப்படியும் கண்டுபிடிச்சுடலாம்" என்று பக்கத்திலே இருந்தவர்கள் ஆறுதல் சொன்னார்கள். இவர் மறுபடியும் கோபமாகப் பேசினார்.

"என் வீட்டுலே இருந்த நகை திருட்டுப் போனதுனாலே நான் கோபப்படலே சார். அந்தத்திருடன் பண்ணின இன்னொரு காரியம்தான் எனக்குக் கோபத்தை உண்டாக்கி விட்டுது" என்றார்.

"என்ன பண்ணினான்?" என்று கேட்டார்கள்.

நகை... பணத்தையெல்லாம் சுருட்டி எடுத்துக் கட்டிக்கிட்டுப் புறப்படறப்போ அவன் என்னைத்தட்டி எழுப்பி "கதவை தாழ்ப்பாள் போட்டுக்குங்க... ஊர்லே திருட்டுப்பயம் ஜாஸ்தியா இருக்கு" ன்னு சொல்லிட்டுப் போறான் சார்...! என்றார் ஆவேசமாக...

---

**கொ**சுக்கடியிலிருந்து தப்பிக்க இன்றைக்கு எத்தனை மிஷின்கள். சுருள்கள் வந்துள்ளன. அத்தனை ஏதோ ஒரு விதத்தில் பக்கவிளைவுகளை ஏற்படுத்துகின்றன. வேப்பெண்ணை சில துளிகளை எடுத்து கை, கால், முகத்தில் தடவி தூங்கினால் கொசுக்கள் நம்மை நெருங்காது. மேலும் சருமநோயும் நம்மை அண்டாது.

– **அக்னிபுத்திரன்,** மதுரை

---



# தைப்பூச வழிநடைப்பயணம்

தைப்பூசத்தை முன்னிட்டு நகரத்தார் பெருமக்கள் குடும்பம், குடும்பமாக பாதயாத்திரையாக பழனிக்குச் செல்வது வழக்கம். பழனியாண்டவரைத் தரிசிக்க வழிநடைப்பயணம் செல்லும் வழியில் அன்னதானம் செய்தும், பஜனையும் பக்திப்பாடல்களுமாக மகிழ்ச்சியுடன் சென்று வருகிறார்கள். இந்த வழிநடைபயணம் முந்நூறு ஆண்டுகளாக நகரத்தாரிடம் வழக்கத்திலிருந்து வருவதாக பழனி திருக்கோயில் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன் நேமங்கோயிலைச் சேர்ந்த குமரப்பன் செட்டியார் உப்பு வணிகம் செய்ய பழனி நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்போது சத்திரப்பட்டி அருகே வரும்போது குமரப்பன் செட்டியாருக்கு திடீரென்று வயிற்றுவலி ஏற்பட்டிருக்கிறது. வலி தாங்கமுடியாமல் அழுது கதறி முருகனை வேண்டியிருக்கிறார். அப்போது ஒரு காவியுடை அணிந்த துறவி ஒருவர், குமரப்பன்செட்டியாரிடம், "ஏன் வணிகரே அழுகிறீர்...?" என்று கேட்க, குமரப்பன் செட்டியார் தனது வயிற்றுவலியின் வேதனையைக் கூற, "துறவி தன்னிடமிருந்த விபூதியைக் கொடுத்து நெற்றியில் பூசிவிட்டு சாப்பிடுங்கள்" என்றாராம். உடனே குமரப்பன் செட்டியாருக்கு வலியெல்லாம் பறந்து உடல் முழுவதும் குளிர்ந்த நிலை ஏற்பட்டதாம். குமரப்பன் செட்டியார் அந்தத் துறவியிடம், சாமி, "பழனியாண்டவனைப் போல் என்னைக் காப்பாற்றி விட்டீர்கள். தங்களுக்கு என்ன வேண்டும்? எது கேட்டாலும் தருகிறேன்...!" என்று கூறினாராம்.

அதற்கு அந்தத் துறவியும் "எனக்கு ஒன்றும் வேண்டாம். பழனி தைப்பூசத் திருவிழாவிற்கு காவடி எடுத்து பாதயாத்திரையாக உங்கள் குடும்பத்தோடு வரவேண்டும்" என்று கூறியிருக்கிறார். அந்த ஆண்டு தைப்பூசத்திற்கு குமரப்பன் செட்டியார் தனது குடும்பத்தோடு காவடி எடுத்துக்கொண்டு பழனிக்கு பாதயாத்திரை செல்லத் தொடங்கினார். அன்றிலிருந்து நகரத்தார் பெருமக்கள் பழனிக்கு வழிநடைப் பயணமாகச் சென்று பழனியாண்டவரை தரிசித்து மகிழ்கின்றனர்.

---



# முத்தமிழறிஞருக்கு நன்றி...!

இந்த நூற்றாண்டின் இறுதியில் வள்ளுவனுக்கு வானளாவிய திருவுருவச்சிலையினை கொஞ்சும் குமரிக்கடலில் நிறுவிய முதல்வர் முத்தமிழறிஞருக்கு நன்றிகள்...! 1999ஆம் ஆண்டை சமஸ்கிருத ஆண்டாக கொண்டாடியது போல் 2000ஆம் ஆண்டை தமிழ்மொழியின் ஆண்டாக அறிவிக்கவேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்த முதல்வருக்கு மீண்டும் நமது குரலின் நன்றிகள்... கோரிக்கை வெல்லட்டும்! என வாழ்த்துகிறோம்.

**- *ஆசிரியர்***

91/1

# மனைவி மரித்தார்...! மீனை வெறுத்தார்...!

வி.என். சிதம்பரம்



தந்தை பெரியார் அவர்களுக்கு எத்தனையோ சீடர்கள் உண்டு என்றாலும், தன் தந்தையார் கஸ்தூரி அவர்களால் பெரியாருக்குத் தாரை வார்க்கப்பட்டவர் என்றால் திரு. க. ராஜாராம் அவர்கள் ஒருவர் தான்.

தந்தை பெரியாரின் சீடராக அறிஞர் அண்ணா டாக்டர். கலைஞர், எம்.ஜி.ஆர். போன்றவர்களோடு நெருங்கிய தொடர்பும், பற்றும் கொண்ட திராவிட இயக்கவாதி, சுயமரியாதைப்போராளி எனப் போற்றப்படுபவர் அண்ணன் க. ராஜாராம் அவர்கள்.

சட்டப்பேரவைத்தலைவர், தொழிலாளர் நல அமைச்சர், தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி என பல பதவிகளில் தன் முத்திரையைப் பதித்தவர். அண்ணன் க. ராஜாராம் அவர்களோடு நெருங்கிய நட்பு கொண்டவன் என்பதால் அவரைப் பற்றி நான் அறிந்த செய்தியை நீங்கள் அறியக் கூறுகிறேன். அதாவது, ஒருநாள் தனது மனைவி சாந்தா அவர்களுடன் சாப்பிட அமர்ந்தாராம். அன்று அண்ணனுக்கு மிகவும் பிடித்த மீன் சமையல் என்பதால் இருவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தினார்களாம். ஆனால் அன்று அவரது துணைவியார் சாந்தா அவர்களுக்கு திடீரென்று உடல் நலிவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட இவருடன் உரையாடிக் கொண்டிருந்தவாறே அருமை மனைவி உயிர் துறந்தாராம். அன்றிலிருந்து இன்றுவரை மீன் சாப்பிடுவதையே நிறுத்தி விட்டாராம். அவரின் குடும்பத்தினரோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததால் இந்நிகழ்ச்சியை அறியமுடிந்த எனக்கு அய்யன் வள்ளுவனின் குறளொன்று நினைவுக்கு வந்தது.

அந்தக்குறள்...

**நெஞ்சத்தார் காத லவர்ஆக,**
**வெய்து உண்டல்**
**அஞ்சுதும், வேபாக்கு அறிந்து.**

பொருள்:

ஒரு காதலியோ அல்லது மனைவியோ தன்னவரை எந்த நேரமும் நேசிப்பதால் அவன் அவளின் நெஞ்சினிலேயே வாழ்வதாகக் கருதி சூடாக ஏதேனும் உண்டால் அது தன் நெஞ்சினிலிருக்கும் தன்னவரைச் சுட்டுவிடும் என்றெண்ணி, அதை ஆறவைத்து சாப்பிடுகிறாள்.

ஒரு மனைவி தன் கணவன் மீது வைத்துள்ள பாசத்தை அய்யன் வள்ளுவன் இப்படி தனது குறளில் படம் பிடித்துக் காட்டுகிறார்.

ஆனால், உண்மையிலேயே வாழ்ந்த தனது மனைவி தான் ஆசைப்பட்ட மீனை கடைசியாக தனக்கு உணவாகப் பரிமாறி இருவரும் உரையாடிக்கொண்டே உணவு உண்ட அந்த நிகழ்வின் நினைவாக மீன் சாப்பிடுவதையே நிறுத்திவிட்ட அண்ணன் ராஜாராம் அவர்கள் தன் மனைவி மீது கொண்ட காதலின் நிலைப்பாட்டைக் அறிந்து வியந்து போனேன்.

சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு மீன் ஒரு அருமருந்து என்று மருத்துவர்கள் சொன்னாலும் தனக்கு சர்க்கரை நோயிருந்தாலும் மனைவியின் மீது கொண்ட காதலால் அந்த உணவையே வெறுத்து இன்றுவரை தனது மனைவியோடு வாழுகின்ற அந்தப்புனித காதலை எண்ணி என் கண்களில் நீர்த்திரையிட்டுப் போனது. இதுதானோ இல்லறம்... நல்லறம் என்பது...

# 7 நகரத்தார் வாழ்வும் வாக்கும்

--- சொ.சொ.மீ. சுந்தரம் ---

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்புவிழா. பட்டம் பெறுவதற்குப் பலர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். துணைவேந்தரின் கார் முன்னால் வருகிறது. இணைவேந்தரின் கார் பின்னால் வருகிறது. துணைவேந்தரின் கார் பட்டமளிப்பு விழா நடக்கும் மண்டபத்தின் வாயிலில் நிற்கிறது. இணைவேந்தர் தன் காரிலிருந்து இறங்கி வந்து துணைவேந்தரின் கார்க்கதவைத் திறந்து விடுகிறார். துணைவேந்தர் இறங்கிச் செல்ல, இணைவேந்தர் பின்னால் போகிறார். எல்லோரும் வியப்புடன் பார்க்கிறார்கள். துணைவேந்தர் மாறக்கூடியவர். இணைவேந்தர் பல்கலைக்கழகம் கண்டவரின் மூத்தமகன். ஒரு மூத்த பேராசிரியர் இணைவேந்தரிடம் கேட்கிறார். "உங்களிடம் பணியாற்றும் துணைவேந்தருக்கு இவ்வளவு மரியாதை தந்து கார்க்கதவை நீங்கள் ஏன் திறந்து விடுகிறீர்கள்?"

இணைவேந்தர் கூறுகிறார், "நாம் அவருக்கு மதிப்பும் மரியாதையும் தந்தால்தான் மற்றவர்கள் அவரை மதிப்பார்கள். இது கல்விக்குச் செல்வம் தரும் அரச மரியாதை."

இப்படிக்கூறிய இணைவேந்தர் செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்கள். "பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பொறுப்பு துணைவேந்தருக்கு உரியது. அவரை இணைவேந்தர் மதிக்கவேண்டும். அப்பொழுதுதான் பல்கலைக்கழகம் சிறக்கும்" என்ற எண்ணம் கொண்ட முத்தையவேள் தன் செயலால் பிறருக்கும் வழிகாட்டினார். இந்தியாவின் அதிகம் படித்த அறிவாளிகள் எந்தப் பகுதியில் இருந்தாலும், அவர்களை அழைத்துவந்து, கேட்ட சம்பளத்துக்கு அதிகமாக்க் கொடுத்து, பல்கலைக்கழகப்பணியில் அமர்த்தி தந்தை அமைத்த பல்கலைக் கழகத்துக்கு வலிமையும், பொலிவும் சேர்த்த பெருமை முத்தையா அரசருக்கே உரியது.

**செந்தமிழர் நன்னாட்டுக் கற்றோருக்குள்**
**சிதம்பரத்தில் படித்தவர்கள்**
**முக்கால்வாசி**

என்று பாடும் அளவுக்கு முத்தையா செட்டியாரின் வாக்கு, பல்கலைக்கழகத்துக்கு வாழ்வு தந்தது.

**கன்றை ஆவெனக் கழகத்தை ஓம்பும்**
**அறிஞன் முத்தையனை அண்ணலின்**
**புதல்வனைப்**
**பெற்றதும் அன்றோ உற்ற காரணம்**

என்று பாரதிதாசன் பாராட்டுமாறு, "இப்பல்கலைக்கழகம் தமிழ்மக்களின் சொத்து" என்று கூறி அதைப் பாதுகாத்தவர் அவர்.

ஆளுநர் பதவி வந்தபோதும் ஆசைப்படாமல் விட்டுவிட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக இருப்பதில் இதயம் மகிழ்ந்தவர்.

அண்ணாமலை அரசர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக இருந்தபோது, முத்தையவேள் கல்வி அமைச்சர் என்ற முறையில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக இருந்தார்கள். அப்பா அரசர், மகன் அமைச்சர். இதைப் பாராட்டிய கொத்தமங்கலம் சுப்பு

**அண்ணா மலைக்கலைக் கழகத்தில்**
**அரசர் தந்தை இணைவேந்தர்**
**சென்னைப் பல்கலைக் கழகத்தில்**
**செல்வத் திருமகன் இணைவேந்தர்**
**தந்தை செட்டி நாட்டரசர்**
**தனயன் சென்னை மந்திரியாம்**
**இந்நாள் வரையில் இதுபோலே**
**எங்கும் நடந்தது கிடையாது**

என்று பாடி மகிழ்ந்தார். "ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு இருக்கும் வசதிகளுக்கு, அவர் பொதுமக்களை நினைக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால் அவர் செய்யும் நற்செயல்களைப் பார்க்கும்போது அவரை மகாராஜா என்று அழைக்கத் தோன்றுகிறது" என்று பெரியார் ஈ.வே.ரா. பாராட்டினார். பச்சையப்பன் கல்லூரியில் அரசர் பட்டத்தைத் திறந்து வைத்த அறிஞர் அண்ணா அவர்கள், "தோளில் கொடியேந்தி, தமிழுக்காக ஊர்வலம் வந்த ராஜா அவர்கள் படத்தைத் திறந்து வைப்பது தமிழ்த்தொண்டர்களுக்கு செய்யும் மரியாதை ஆகும்" என்று மகிழ்ந்தார்.

கல்லூரிகளில் பிற துறைகளுக்கெல்லாம் தலைவர்கள் இருக்கத் தமிழுக்கு மட்டும் தனித்துறையும் தலைவரும் இல்லாத காலத்தில் தமிழ்த்துறையைத் தனியாக அமைத்து, அதற்குத் தமிழ்த்துறைத் தலைவரை நியமித்து, பிற துறைத் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சம்பளத்தைப்போல ஊதியமும் கொடுத்து உயர்த்தியவர் ராஜா முத்தையா அவர்கள். இவர் சிறப்பை உணர்ந்து

**வடநாட்டில் மோதிலால் நேருவுக்கு ஜவஹர்லால் மகனாகக்**
**கிடைத்ததுபோல, தென்னாட்டில் அண்ணாமலை அரசருக்கு**
**முத்தையா செட்டியார் திருமகனாகப் பிறந்தார்** என்றும்
**இவர் நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த நாயகன்** என்றும் புலவர்கள் பாராட்டினர்.

**அண்ணா மலைக்குப் பிள்ளை**
**அனைவர்க்கும் வழங்கும் முல்லை**

என்று கவியரசு கண்ணதாசன் இவரைப் புகழேணியில் ஏற்றிவைத்தார்

அரசர் முத்தையவேள் எவர் மனமும் புண்படுமாறு பேசமாட்டார். வயதில் இளையவர்களையும் மரியாதையோடு நீங்கள் என்று அழைப்பார். காலத்தோடு மோதிக்கொள்ளாமல், சேர்ந்து ஓடியே சிறப்புப் பெற்றவர். அன்புமிக்க மனைவி, அறிவு நிரம்பிய மக்கள், செயல்திறமுள்ள பணியாளர்கள் என்று எல்லா வகையிலும் சிறப்புப் பெற்றவர்.

ராணிமெய்யம்மை ஆச்சி மறைந்தபிறகு, அரசர் முத்தையவேள் ஆச்சியின் படத்துக்கு மாலையிட்டு வணங்குவதைக் காலையிலும் இரவிலும் வழக்கமாகக் கொண்டிருந்தார். தனக்குப் போடும் மாலைகளை ஆச்சியின் படத்துக்கு அணிவித்து அஞ்சலி செலுத்துவார். அந்தச் சிறந்த மனிதர் உயர்ந்த கணவராகவும் இருந்து நமக்கு வழிகாட்டினார்.

சென்னைக்கு வந்தவரை வரவேற்க அண்ணாமலைமன்றம் இருப்பது போல, மதுரைக்கு வருகின்றவர்களை வரவேற்க முத்தையாமன்றம் அமைத்து, தமிழிசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றினார்.

1932-ல் சென்னை மாநகராட்சியின் முதல் மேயராகப் பதவியேற்றார். இருமுறை அமைச்சராகப் பணியாற்றினார். சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவற்றில் 31 ஆண்டுகள் பணியாற்றினார். அவர் தொட்டது துலங்கிற்று. தொடர்ந்து வளர்ந்தது.

விருந்தோம்புவதில் அவர் அரசர். அவர் வீட்டில் விருந்தினர் கூட்டம் நிறைந்திருக்கும். ராஜா அவர்கள் பக்கத்தில் நின்று வேண்டியதை மீண்டும் மீண்டும் உண்ண வைப்பார்கள். முன்னாள் குடியரசுத்தலைவர் வெங்கட்ராமன் அவர்கள் தன் வீட்டுத்திருமணத்துக்கு ராஜா அவர்களை அழைத்து அவருக்கு அன்பு வேண்டுகோள் என்றும் விடுத்தார்கள். "என் வீட்டுத் திருமணத்தில் விருந்து உபசரிக்கவும் பந்தி விசாரணை செய்யவும் நகரத்தார்களை அனுப்பி உதவுங்கள். இப்பணியில் நீங்கள்தான் சிறந்தவர்கள்" என்று வேண்டினார் அரசரின் விருந்தோம்பலும், அவர் வாழ்வும், நகரத்தார் சமுதாயம் என்னும் பொற்குடத்துப் பொட்டு வைத்தது போல் அமைந்தன.

**- வளரும்**

# தில்லைக்கூத்தனை கேளுங்கள்

## தில்லைக்கூத்தன் பதில்கள்

**(குரல்பித்தன், காரைக்குடி)** ★

**கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை நிறுவியதைப் பற்றி...?**

தமிழின் தலைமகனுக்கு முதல்வர் முத்தமிழறிஞரின் முத்தாய்ப்பான சாதனை. அய்யன் வள்ளுவனுக்கு அறிவார்ந்தோர் செய்த முதல் மரியாதை. மூன்று பாலும், 133 அதிகாரங்களும் கொண்ட 1330 குறள்களில் அவர் சொல்லாத விஷயங்களே இல்லை என்பது உலகத்தார் அறிந்த ஒன்று. திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்கவேண்டும் என்ற முதல்வரின் கோரிக்கையோடு நகரத்தார்குரலும் கரம் சேர்க்கிறது. அய்யன் வள்ளுவன் எழுதியதோ திருக்குறள் நூல் ஒன்றுதான். இரண்டாயிரம் ஆண்டுகளாக மக்களோடு மக்களாய்ப் பின்னிப் பிணைந்திட்ட இலக்கியம். மகாபாரதமோ, ராமாயணமோ, கற்பனைச் செறிவு நிறைந்த கதைகளோடு விளங்கியதால் இன்றும் நிலைத்திருந்தாலும், ஒவ்வொரு குறளிலும் ஒரு நீதியை, படிப்பினையை உணர்த்துகின்ற வாழ்க்கை இலக்கியம் அல்லவா...? ஆண்டவனுக்கு, அரசனுக்கு, நட்புக்கு, வாழ்க்கைக்கு, தர்மத்திற்கு, காமத்திற்கு, நல்லவனுக்கு, தீயவனுக்கு, வறுமைக்கு, நன்மைக்கு என்று ஈற்றடித்தமிழால் உலகை அளந்த ஒப்பற்ற அய்யன் வள்ளுவனுக்கு வானளாவிய திருவுருவச்சிலையினை கொஞ்சும் குமரிக்கடலின் நடுவில் நிறுவியது மிகப்பொருத்தம். பாராட்டுக்குரிய செயல்.

**(விசாலாட்சி, கோவை)**

**இந்துமதம் மற்ற மதங்களைப் போல வளரவில்லையே...?**

மதங்கள் வளர்வது என்பது வேறு, வளர்ப்பது என்பது வேறு. சுவாமி விவேகானந்தர் சிகாகோ நகரில் இந்துமதக் கோட்பாடுகளை உலகத்தில் உள்ள மற்ற மதத்தலைவர்களே வியக்கும்வண்ணம் விளக்கிக்கூறி ஒரு சாதனை படைத்தார். அர்த்தமுள்ள இந்துமதம் என்று கவியரசு கண்ணதாசன் இந்துமதத் தத்துவங்களைப் படைத்துள்ளார். மதபோதனைகளால், கோட்பாடுகளால், தத்துவங்களின் ஆழமான கருத்துக்களால் கவரப்பெற்ற மனங்கள் மதங்கள் மாறுவதுதான் மதம் வளர்கிறது என்று பொருள். வேறு ஆசைகளால் தூண்டப்பெற்று மனங்களை கவர்ந்து மதங்கள் வளர்வது நல்லதல்ல... அது மதங்களின் புனிதக்கோட்பாட்டுக்கே எதிரானது என நினைக்கிறேன். டாக்டர். அம்பேத்கார் இந்துமதத்திலிருந்து புத்தமதத்தினை தழுவினார் என்பதில் புத்தரின் மீதும், அந்த மதக்கோட்பாடுகளிலும் அவர் உள்ளம் நனைந்து கரைந்திருக்கின்றது என்பதுதானே... இந்தியாவில் பிறந்த கௌதமபுத்தருக்கு இலங்கையிலும், ஜப்பானிலும், சீனாவிலும் இன்னும் பலநாடுகளில் ஆலயங்கள், வழிபாடுகள் நடக்கிறது என்றால்... புத்தரின் கொள்கைகள் அவரவர் மனதிற்கேற்றபடி மனங்களைக் கவர்ந்திருக்கிறது. அதன் ஆழமான உட்பொருளை உணர்ந்து, மெய் மறந்து திளைத்திருக்கிறார்கள் என்றுதானே பொருள். இந்துக்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் நமது மதக்கோட்பாடுகளை, மாண்புகளைப் பரப்பவில்லையோ என்ற எண்ணம் தங்களுக்குத் தோன்றியிருக்கிறது. இந்தியர் இருக்கும் வரை இந்துமதம் இருக்கும், வாழும், வளரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

★ **இக்குறியீடு இட்ட கேள்வி ரூ. 25-00 பரிசு பெறுகிறது.**

# இல்ல மங்கல விழாக்கள்

**வி**ரையாச்சிலை வெ.லெ. வெங்கடாசலம் செட்டியார் அவர்களது புதல்வன் செந்தில் (எ) செட்டியப்பன், பி.எஸ்.ஸி., (ஏசியன் கம்ப்யூட்டர் சிஸ்டம், சென்னைக்கும் நாட்டரசன்கோட்டை அரு.அ.கண. ராமனாதன் செட்டியார் அவர்களின் புதல்வி காமாட்சி (எ) மீனாள், பி.ஏ.,க்கும் 15-11-99 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**ரா**யவரம் சோம.வ. பழனியப்பசெட்டியார் அவர்களின் சிறிய தகப்பனார் முத்தையா செட்டியார் பேத்தியும், மு.காசி மகளுமான செல்வி உண்ணாமலைக்கும் நற்சாந்துப்பட்டி லெ.பெரி. கணேசன் செட்டியார் மகள் திருவளர்செல்வன் அடைக்கலவன் என்ற முத்து, எம்.காம்., க்கும்12-12-99 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**பனை**யப்பட்டி சு.ப.அ.ராம. தியாகராஜன் செட்டியார் அவர்களின் புதல்வன் இராமநாதன் (எ) சாய்கிருஷ்ணன், பி.ஏ., எல்.எல்.பி., க்கும் (வழக்குரைஞர், உயர்நீதிமன்றம், சென்னை)க்கும் கண்டரமாணிக்கம் லெ. முரு.மா. மாதவன் செட்டியார் - சேவாத்தாள் ஆச்சி இவர்களின் புதல்வி வள்ளிக்கண்ணு, பி.எஸ்.ஸி., டி.டி.ஈ.,க்கும் 12-12-99 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**ரா**ங்கியம் ஆ.அண. அண்ணாமலை செட்டியார் பேத்தியும், டாக்டர். அண. ஆண்டியப்பன் அவர்களின் தம்பி அண்ணாமலை செட்டியார் மகளுமான முத்துக்கருப்பி என்ற கவிதா, பி.ஏ., க்கும் பி. அழகர்புரி மு.ராம.மு. முத்தையா செட்டியார் பேரனும், மு. கருப்பையா செட்டியார் மகனுமான செல்வன் அழகப்பன்,M.C.A., (Systems Analyst, SR Singapore Pvt. Ltd., Singapore)க்கும் 12-12-99 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**பா**கனேரி கேஎன். சிங்காரம் செட்டியார் - திருமதி. சி. கல்யாணி ஆச்சி தம்பதியரின் அறுபத்தொன்றாமாண்டு நிறைவு சாந்தி கல்யாணம் 1-1-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. அவரின் மக்கள் கேஎன்.எஸ். நாச்சியப்பன், கேஎன்.எஸ்.அசோக்குமார் மற்றும் உறவினர்களும், பிரமுகர்களும் பங்கேற்று வாழ்த்திச் சிறப்பித்தனர்.

**ப**ள்ளத்தூர் உ.அரு.ராம.அரு.அரு.ராம.அரு. விஸ்வநாதன் - மரகதவள்ளி தம்பதியருக்கு குழந்தை பிறந்துள்ளது. தேவகோட்டையிலிருந்து பள்ளத்தூருக்கு தாயையும், சேயையும் கூட்டிக் கொள்ளும் விழா 20-1-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. பள்ளத்தூரில் நடந்த இந்த விழாவிலும், விளையாட்டுப் பெட்டி வேவிலும், விருந்திலும் உறவினர்களும், நண்பர்களும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

*எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணாபுரம் 4வது குறுக்குத் தெரு, மதுரை - 9 ல் அச்சிட்டு 'நடராஜ்' அண்ணாமலை அவர்களால் 108-109, நேதாஜிரோடு, மதுரை - 1 லிருந்து வெளியிடப்பெறுகிறது.*

*- ஆசிரியர் வீ.என். சிதம்பரம்*



# கற்பக விநாயகர் அற்புத கீர்த்தி

முரு.லெ. முருக்கப்பன், பிள்ளையார்பட்டி

உலகின் முதல் குடவரைக் கோயில் பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் ஆலயம். இரண்டு கரங்களுடன் அர்த்தபத்மாசனத்தில் தாமரையில் அமர்ந்து கொண்டு தன் தந்தையான சிவபெருமானை பூஜிக்கும் நிலையில் இருந்து கொண்டு பக்தருக்கு அருள் பாலிக்கும் காட்சி தருபவர் கற்பகவிநாயகப்பெருமான்.

இந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால் வரம் கேட்கும் பக்தர்களுக்கு வளங்களை அள்ளித்தரும் அற்புதகீர்த்தியாக விளங்குகிறார்.

சிவபெருமான் கிழக்கு நோக்கி இருக்கின்றபடியால் அவரை பூஜிக்கும் அற்புதகீர்த்தி வடக்கு நோக்கி இருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும்.

விநாயகப்பெருமான், சிவபெருமான் லிங்கோத்பவர் மற்றும் சங்கரநாராயணர் ஆகியோர் அனைவரும் மலையின் மீது வடிவமைக்கப்பெற்றவர்கள். பிரதிஷ்டை செய்தவை அல்ல.

விநாயகருக்கு முன் உள்ள மூன்று அகண்ட தூண்களும் மலையிலேயே செதுக்கப்பட்டவை. மூலஸ்தான விநாயகருக்கு முன் ஒன்பது விளக்குகள் உள்ளன. அதாவது நவக்கிரகங்களும் தன்னைச் சுற்றி இருப்பது போல் உள்ளது. திருப்பாதத்தில் 16 தீபங்கள் கொண்ட ஒரு பாதவிளக்கு உள்ளது. விநாயகரை வணங்குபவர்கள் 16 செல்வங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ்வார்கள் என்பது ஐதீகம். அற்புத கீர்த்தி தரும் கற்பகவிநாயகர் நகரத்தார் பெருமக்களின் பெருமுயற்சியால் கட்டப்பெற்ற ஆயிரமாண்டு வரலாற்றைக் கொண்ட திருத்தலம் என்பது நமக்குப் பெருமைதானே...!

## திருநீறின் மகிமை

ஒருமுறை விஸ்வாமித்திரமாமுனிவர் சிவஅருளால் தேவலோகத்தை காண சென்றார். அங்கே சொர்க்கலோகத்தையும் நரகலோகத்தையும் காண்பதற்கு சிவனிடம் அனுமதி பெற்று அங்கே சென்றிருக்கிறார். சொர்க்கபுரியினை பார்த்துவிட்டு பெருமையுடன் நரகலோகத்தையும் காண சென்றபோது. அங்கே பாவிகளும், கொடுங்கோலர்களும் பாதாளலோகத்தில் வதைபடுவதை விஸ்வாமித்திரர் குனிந்து பார்த்தபோது அவரின் நெற்றியிலிருந்த விபூதி துகள்கள் அந்தப் பாதாளலோகத்தில் விழுந்து சிதற விபூதி பட்டவுடன் நரகலோகமே சொக்கலோகம் ஆனதாம். வதைபட்ட அனைவரும் விமோசனம் பெற்றனர். உடனே எமதர்மராஜன் இனிமேல் யாரும் எமலோகத்துக்கு விபூதி அணிந்து வரக்கூடாது என்ற சட்டத்தை பிறப்பித்தாராம். விபூதியின் மகிமையினை பார்த்தீர்களா...?

- **அக்னிபுத்திரன்,** மதுரை

# சொன்னதும்... கேட்டதும்

**அ**மெரிக்காவில் உள்ள நண்பர்களிடம் அரைமணிநேரம் செல்லுலார் போனில் பேசுகின்ற மனிதன்... அடுத்த வீட்டில் அடிபட்டுக் கிடக்கும் மனிதனை விசாரிக்கக்கூட அந்த மனிதனுக்கு நேரமில்லை...

- தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

**போ**க்குவரத்து விதிகளை நம் மக்களும், ஓட்டுநர்களும் மதிப்பதே கிடையாது. அந்த விதிகளை மேலைநாடுகளில் உள்ளதுபோல் கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தால்தான் சாலை விபத்துக்களைத் தவிர்க்கமுடியும்...

- திரு. வீ. தங்கவேலு, மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர்

மூங்கில் இலைமேலே
தூங்குபனி நீரே
தூங்குபனி நீரை
வாங்கு கதிரோனே...!

என்ற ஏற்றக்காரன் பாடிய இந்தப்பாட்டு அந்த வழியே சென்ற கவிச்சக்கரவர்த்தி கம்பரின் காதுகளில் வந்து கேட்க கம்பர் வியந்தாராம்...

- டாக்டர். தமிழண்ணல், ஆனந்தவிகடன் (இலக்கியம்)

சமத்துவப் போராளியாய்
சமுதாயப்புரட்சி செய்யும் தத்துவ ஞானியாய்
மகத்துவம் மிகக்கொண்ட மனிதகுலத் திருவிளக்காய்
பூமிக்கே புனிதஉரை வகுத்தளித்து
புத்தெழுச்சி பெற்றுத்தந்த புனிதனவன்
அருளாதாரம் வழங்கி அனைத்துயிரும் போற்றியவன்
அரசியல், பொருளாதாரம் என ஆய்வுரையை ஆற்றியவன்
ஆளும் கலாச்சாரம் எதுவெனக் காட்டியவன்
வள்ளுவன்...! வள்ளுவன்...!! வள்ளுவன்...!!!

பெய் எனச் சொன்னதும்
பெய்யும் மழையாய்
பெண்குலம் அடிடமைப்படுவதை விடுத்து
மெய்யுரை கண்டு மெல்லியல் நிமிர்ந்திட
அய்யன் படைத்தது அருங்குறள் என்போம்...!

- முதல்வர் கலைஞர், குமரியில் திருவள்ளுவர் சிலை திறப்புவிழாவில்

# நானும் என் திராவிட இயக்க நினைவுகளும்...

(இராம. சுப்பையா சொல்ல சுப. வீரபாண்டியன் எழுதியது)

**78** வருஷத்துக்கு முன்னாடி (1908 நவம்பர்) அரிமளம்னு ஒரு கிராமத்தில் நான் பொறந்தேன். அப்பா பேரு பழனியப்பன் (செட்டியார்) அம்மா பேரு சிட்டாள் (ஆச்சி). அப்பாவுக்கு ரெண்டு தாரம். முதல் தாரத்துக்கு ரெண்டு பெண்கள் மட்டும்தான். ரெண்டாம் தாரமான என் அம்மாவுக்கு ரெண்டு பையன்கள். நானும் என்னோட அண்ணன் அழகப்பனும்.

அரிமளம் கிராமம், புதுக்-கோட்டையிலிருந்து பத்து மைல்ல இருக்கு. அப்போ புதுக்கோட்டை சமஸ்தானம் புதுக்கோட்டை ராஜா எல்லாம் இருந்த காலம்.

அரிமளம், ரொம்பப் பள்ளமான எடத்திலே அமைஞ்ச ஊரு. லேசா மழை அடிச்சாகூட ஊரே ஏரி மாதிரி நிரம்பிப் போயிடும். "அரும்பள்ளம்"ங்கிற பேருதான் அரிமளம்னு மருவிப் போயிட்டதாகச் சொல்லுவாங்க.

அரிமளத்திலே, நான் அதிக நாள் இல்லே. 10, 11 வயசு வரைக்குந்தான் அங்க இருந்தேன். அந்த 10 வருஷத்திலே, ஏட்டுப் பள்ளிக்கூடத்திலே (திண்ணைப் பள்ளிகூடம்) நாலைஞ்சு வருஷம் படிச்சேன். அப்போ-வெல்லாம், ஒண்ணாவது, ரெண்டாவதுன்னு படிப்பில்லே. என் சுவடி, கீழ் வாலக்கம் மூதுரை, நல்வழி... இப்படிக் கொஞ்ச நாளைக்கு ஒவ்வொன்னா சொல்லிக் குடுப்பாங்க. சுருக்கமாகச் சொன்னா தமிழும் கணக்குந்தான் படிப்பு.

எங்க ஊர்லேயெல்லாம், பையன்களுக்குப் பத்து வயசாயிட்டா "பொட்டியடியிலே கை பழக"ன்னு சொல்லி வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுவாங்க. எனக்கும் அப்படி ஒரு நெலமை வந்தது. என்னோட அம்மாவழி உறவினர் சிதம்பரஞ்செட்டியார், என்னைக் "கைபழக"ப் பர்மாவுக்கு கூட்டிப் போறதா சொன்னாரு. வீட்லயும் சரின்னு சொல்லிட்டாங்க. அரிமளத்தை விட்டுப் பொறப்பட்டேன்.

ரங்கோன்...

பர்மாவோட தலைநகரம். அங்கதான் முதல்ல என்னை அழைச்சிட்டுப் போனாங்க. அங்கேயிருந்து "மைநாங்"ன்னு ஒரு ஊருக்குப் போனோம்.

பொட்டியடியிலே கைபழகுறதுன்னா, வட்டிக்கடையிலே வரவு செலவுக்கணக்கு எழுதிப் பழகுறதுன்னு அர்த்தம். அந்த வேலைக்குத்தான் நானும் போனேன். சம்பளம் எதுவும் கொடுக்கமாட்டாங்க. வயித்துக்குச் சாப்பாடும், துணிமணியும் மட்டுந்தான். மூணுவருஷம் காண்ட்ராக்ட்லே அங்கே எனக்கு வேலை.

முதல்ல, பர்மா மொழியில, ஹிந்துஸ்தான் மொழியில சில வார்த்தைகளை கத்துக் கொடுத்தாங்க. சுமியா (ஐயா), லாபாம் (வாருங்கள்), படா ஐயா பாக்கியா (பெரிய ஐயா வெளியிலே போயிருக்கிறார்) இப்படிச் சில வார்த்தைகளைத் தமிழிலே எழுதிக் கொடுத்திடுவாங்க. அதை வச்சுகிட்டு கொஞ்சநாள் சமாளிச்சு, பிறகு கொஞ்சம் கொஞ்சமா பேசப் பழகிட்டேன்.

பிறகு, அங்கயிருந்து பவுண்டேங்கிற ஊருக்கு, இன்னொரு வட்டிக்கடைக்கு, சம்பளத்தோட அனுப்பினாங்க. பவுண்டே கடை முதலாளி திடீர்னு தாய்நாட்டுக்குத் திரும்பவேண்டிய வேலை வந்தவுடனே, எனக்கு ஏஜண்ட் பவர் கொடுத்து, கடையை என் பொறுப்பில விட்டுட்டுப் போயிட்டாரு. அப்பிடி என் பொறுப்பில கடை இருந்தப்போதான் அந்தத்தொழில் மேல, எனக்கு மனசுக்குள்ளே ஒரு வெறுப்பு வந்திடுச்சு.

பர்மாவில் ஏழை விவசாயி மக்கள்

ரொம்ப அப்பாவி மக்களாகவும், பரிசுத்தமான மக்களாகவும் இருந்தாங்க. அவுங்க வெள்ளாமைக்காக எவ்வளவு வட்டின்னாலும் பரவாயில்லைன்னு கடன் வாங்குவாங்க. பிறகு அறுவடை முடிஞ்சதும் கொண்டு வந்து கொட்டிடுவாங்க. ஐராவதி நதியினாலே அங்க விவசாயம் நல்லா நடக்கும். கதிருக்கு மேல் தண்ணி கெடக்கும். படகுல போயி அறுவடை பண்ற ஊர்ன்னா பர்மாவைச் சொல்லுவாங்க. அந்த அமோக விளைச்சலினாலே, அவுங்க வட்டியைப் பத்திக் கவலைப்படறதில்லை. ஆனால் எனக்கு வட்டி வாங்குவதெல்லாம் பிடிக்கலே. ஊருக்குப் போகணும்கிற ஆசையும் வந்திடுச்சு. முதலாளி ஊர்லயிருந்து வந்தவுடனே வேலையை விட்டு விலகிட்டு ஊருக்குப் போறதாச் சொன்னேன். சரின்னு சொல்லிட்டார். மறுபடியும் அரிமளம் வந்தேன்.

## பாதரக்குடி சுவாமிகளின் ஜெயந்தி விழா

**பா**தரக்குடி ஸ்ரீமது இரவீந்திரசுவாமிகளின் 45ஆவது ஜெயந்தி விழாவும், சிறப்பு வழிபாடும் 12-1-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. சிவத்திரு பழ. சோம. கயிலாசநாதன் செட்டியார் அவர்களுங்கு "அருட்பணி அண்ணல்" என்ற பட்டமும், பாவைவிழா சொற்பொழிவும் நடைபெற்றது. துலாவூர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிகர் தலைமையேற்றார். அரு. சோமசுந்தரம் வரவேற்றுப் பேசினார். தேவகோட்டை ஜமீன்தார் சோம. நாராயணன் செட்டியார், தவத்திரு. கௌசிக சுவாமிகள், வி.என். சிதம்பரம் செட்டியார் உட்பட பல முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்கள்.

## குடமுழுக்கு விழா

**ஆ**ந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் ரேணிகுண்டா அருகில் உள்ளது காளஹஸ்திவரர் சுவாமி ஞானபிரசுனாம்பிகா கோயில். அந்த ஆலயத்தின் குடமுழுக்குவிழா 19-1-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. காஞ்சி ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகளும், காஞ்சி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 1974ஆம் ஆண்டு தேவகோட்டை பெரியமைனர் குடும்பத்தைச் சேர்ந்த டி.ஆர். அருணாசலம் செட்டியார் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 25 ஆண்டு கழித்து இப்பொழுது குடமுழுக்குவிழா சிறப்பாக நடைபெற்றது. ஆலய இணை ஆணையர் சிவாஜி மற்றும் அறங்காவல் குழுவினர் ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். தேவகோட்டை அரு. இராமநாதன்,பி.ஈ., அஷ்டபந்தன மருந்து சிறப்புற சார்த்தியிருந்தார்.




**இ**ஸ்லாமியர் நாடான இந்தோனேசியாவில் ஒரு அஞ்சல் தலை சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அஞ்சல்தலையில் மஹாவிஷ்ணுவின் உருவம் அச்சிடப்பெற்றுள்ளது. மதமாச்சிரியங்களை மறந்து மனித நேயத்தோடு ஒன்றிட நல்ல உதாரணமல்லவா...?

# சங்கத்துச் செய்திகள்

## புதுக்கோட்டை

நகரத்தார் மகளிர் சங்கம் தொடக்கப் பெற்றது. திருமதி விஜயலட்சுமி நாகப்பன்-தலைவர், திருமதி. உமையாள் சொக்கலிங்கம்-உபதலைவர், திருமதி. விசாலாட்சி தியாகராஜன்-செயலாளர், திருமதி. அடைக்கம்மை சின்னையா-இணைச்செயலாளர், திருமதி. வள்ளிக்கண்ணு முத்து - பொருளாளர் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பெற்றனர். விழாவில் புதுக்கோட்டை நகரத்தார் சங்கத்தலைவர் சாத்தப்பா சுப்பிரமணியன், இளைஞர் சங்கத்தலைவர் அழகப்பன், பொன்னமராவதி பேரூராட்சித்தலைவர் மீனாட்சி ஆச்சி, ரோட்டரி கிளப் தலைவர் மீனாட்சி ஆச்சி, அலமேலு அழகப்பன், திருப்பூர் நகரத்தார் மகளிர் சங்கப் பொருளாளர் மீனாள் மீனாட்சிசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கோவிலூர்

கோவிலூர் மடாலயம் தவத்திரு. நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் அவர்களின் திருவுளப்பாங்கின்படி வேதாந்தத்தை தமிழில் 16 பாடங்களாக முறைப்படுத்தி பல வேதாந்திகளை உருவாக்கியுள்ளது. இச்செயல்பாடுகளில் ஒன்றாக "நிபுகீதை"யின் உரையுடன் கூடிய பதிப்பொன்றை சுவாமிகள் வெளிக்கொணரத் திட்டமிட்டுள்ளார். அதன் விளைவாக ஆய்வுரைத்திலகம் டாக்டர். அ. அறிவொளி அவர்கள் "ரிபுகீதை" வேதாந்த விளக்க தொடர் சொற்பொழிவினை மடாலய கூட்டத்தில் 2-1-2000 முதல் 11-1-2000 வரை நிகழ்த்தினார். உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி எஸ். நடராஜன் விழாவினை துவக்கி வைத்தார்.

## தேவகோட்டை

நகரத்தார் இளைஞர் சங்க ஆண்டுவிழா கந்தர் சஷ்டி விழா அரங்கில் 17-11-99 அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு AL. AR.SM. நாராயணன் செட்டியார் தலைமை ஏற்றார். காவேரி அம்பாள் மில்லின் நிர்வாக இயக்குநர் SV. பெத்தபெருமாள் முன்னிலை ஏற்றார். சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் EM. சுதர்சன நாச்சியப்பன் சிறப்புரை ஆற்றினார். ஆண்டுமலரை V.மோகன் வெளியிட, VR. சின்ன அருணாசலம் பெற்றுக் கொண்டார். கவியரசரின் "பொன்மழைப் பாடல்கள்" ஒப்புவித்தல் போட்டியில் வென்றவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட முதன்மை நீதிபதி A. செல்வம் பரிசுகளை வழங்கினார். விழாவில் கண. சிற்சபேசன், H. ராஜா பி.ஜே.பி. மாநில துணைப் பொதுச் செயலாளர், நெல்லை கண்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். விழாவிற்கான ஏற்பாடுகளை சங்கத்தலைவர் அழகு. சோமசுந்தரம், C. சொக்கலிங்கம், MR.S. சோமசுந்தரம் உட்பட நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

## புதுக்கோட்டை

நகரத்தார் சங்கத்தின் சார்பில் 30-12-99 அன்று அருள்மிகு சாந்தநாகசுவாமி ஆலயத்தில் மஹா அஷ்டமி திதி விழா (படியளந்தநாள்) சிறப்பாக நடைபெற்றது. அபிஷேக ஆராதனைகளும், தேவாரப் பாடல்களும் இசைக்கப்பெற்றன. நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழுவினருடன் தலைவர் சாந்தப்பா சுப்பிரமணியம் செட்டியார் தலைமையில் நிர்வாகிகளும் சிறப்பாகச் செய்திருந்தனர். செயலாளர் என் தியாகராஜன் நன்றி கூறினார்.

## ஈரோடு

நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 31-12-99 அன்று கூட்டு இறைவழிபாடும், சிறப்புச் சொற்பொழிவும் நடைபெற்றது. "நாளைய நூற்றாண்டை வரவேற்போம்" எனுந்தலைப்பில் சொ.சொ.மீ. சுந்தரம் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை தலைவர் மா.பழ. மாயாண்டி செட்டியார், செயலாளர் ஏஎன். செல்வநாதன் மற்றும் நிர்வாகிகள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## சிதம்பரம்

நகரத்தார் சங்கத்தின் சார்பில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 10-1-2000 அன்று கௌரவ டாக்டர் பட்டம் பெற்ற மாண்புமிகு நீதியரசர் அரு. இலக்குமணன் செட்டியார் அவர்களுக்கு பாராட்டுவிழா இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு டாக்டர். எம்.ஏ.எம். இராமசாமி செட்டியார் தலைமை ஏற்றார். வ.சுப.மா. பூங்குன்றன் வரவேற்புரை ஆற்றினார். முனைவர் பழ. முத்துவீரப்பன் வாழ்த்துப்பா இசைத்தார். முனைவர். பழ. வள்ளியம்மை, அ.சே. அண்ணாமலை செட்டியார், கா.பழ. இராமசாமி செட்டியார், முனைவர். பழ. சுபாரத்தினம், பொற்கிழிக்கவிஞர். சொ.சொ.மீ. சுந்தரம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். நீதியரசர் ஏற்புரை ஆற்றினார். இராம. கனகசபை நன்றி கூறினார்.

## நாமக்கல்

அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு நகரத்தார்களால் 30-12-99 அன்று அபிஷேகம் சிறப்பாக நடத்தப்பெற்றது. விழாவில் 800க்கும் மேற்பட்ட நகரத்தார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அஞ்சலின் மூலம் நன்கொடை அனுப்பியர்களுக்கு அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்யப்பெற்று பிரசாதங்களும் அனுப்பி வைக்கப்பட்டது. விழாவில் நாமக்கல் நகரத்தார்களால் மதிய விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## மயிலாப்பூர்

ஆத்தங்குடி நகரப் பெருமக்கள் சார்பில் 3-1-2000 அன்று மயிலை கற்பகாம்பாள் ஆலயத்தில் தங்கத்தேர் திருவுலா விழாவினை ஏற்பாடு செய்தனர். விழாவில் சென்னையில் வசிக்கும் 130 ஆத்தங்குடி நகரப்புள்ளிகளும் தங்களது குடும்பத்துடன் கலந்து கொண்டனர். விழாக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஆறு. அழகப்பன் தலைமையில் விழாக்குழுவினர் லெ. அண்ணாமலை, லெ. நாச்சியப்பன், தப. நாச்சியப்பன் உட்பட அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## மதுரை

மதுரை நகரத்தார் சங்கத்தின் 44ஆவது பேரவைக்கூட்டம் டாக்டர். எம்.ஆர். முத்தையா தலைமையில் நடைபெற்றது. பிஎல். சிதம்பரம் வரவேற்றார். என். நாச்சியப்பன் ஆண்டறிக்கையை வாசித்தார். பின்னர் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். டாக்டர் A.T. தியாகராஜன் தலைவராகவும், "பழம்நீ" லெ.மு.மு. முத்து மாணிக்கம், கயிலைமணி மு. கண்ணப்பன் இருவரும் துணைத்தலைவர்களாகவும் அடுத்த ஆண்டு பேரவை வரை என். நாச்சியப்பன், சி.என். நாச்சியப்பன் செயலாளர்களாகவும், அதற்கு அடுத்த ஆண்டு பேரவை வரை பிஎல். சிதம்பரம், சிஎன். நாச்சியப்பன் செயலாளர்களாகவும், டாக்டர். எஸ். சுவாமிநாதன் பொருளாளராகவும் ஏகமனதாக தேர்வு செய்யப்பெற்றனர். புதிய நிர்வாகிகளுக்கு மாலை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

மதுரை கப்பலூரில் உள்ள ஸ்ரீ மாருதி டெக்ஸ்டைல்ஸ் அதிபர் கண்டவ ராயன்பட்டி எஸ்.ஆர்எம். கணபதி செட்டியார் அவர்கள் கப்பலூர் தொழிற்பேட்டை தொழில் அதிபர் பொதுக்குழுக் கூட்டத்தில் துணைத்தலைவராக தேர்வு செய்யப்பட்டார். தமிழகத்தின் இரண்டாவது பெரிய தொழிற்பேட்டை கப்பலூர் தொழிற்பேட்டை என்பது குறிப்பிடத் தக்கது.

# செயல்திறன் கொண்ட PL.A. சிதம்பரம்

வி.என். சிதம்பரம்

PLA சிதம்பரம் அவர்கள் வலையபட்டி PL.A. அண்ணாமலை செட்டியார் அவர்களின் மைந்தர். கடந்த தஞ்சை நாடாளுமன்றத்தேர்தலில் தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு சுமார் எழுபதாயிரம் வாக்குகள் பெற்றவர். வெற்றி வாய்ப்பை இழந்தாலும் இனிவரும் தேர்தலில் நிச்சயம் பெற்றி பெறுவேன் என்று தன்னம்பிக்கையோடு இருக்கிறார். அவரின் நம்பிக்கை நிச்சயம் வெல்லும். தமிழ்நாடு பஸ் உரிமையாளர் சங்கத்தின் துணைத்தலைவராக இருந்து வருகிறார். தமிழ்நாடு மொத்த மருந்து வணிக சங்கத்தலைவராகவும் இருந்து வருகிறார். 1983-ல் தொடங்கப்பெற்ற தஞ்சை நகரத்தார் சங்கத்தின் 1987 முதல் 1989 வரை தலைவராகவும். பதவிகளை வகித்தவர். பல்வேறு சமூகப்பணிகளினூடே பஸ் அதிபராகவும், மருந்து மொத்த வணிகம், பஸ் உதிரிபாகங்கள் விற்பனை நிலையம், பெட்ரோல் பங்க் என்று பல்வேறு தொழில்களையும் தன் விடாமுயற்சியால் செயலாற்றும் திறன் படைத்தவர். அவர் சந்தித்த அனுபவங்கள், நிகழ்வுகளை எல்லாம் சுவைபடக் கூறியிருக்கிறார். அவரின் இந்தப் பேட்டி வாசகர்களுக்குப் பெரிதும் பயன்படும். குறிப்பாக இளைஞர்களுக்கு இவரின் அனுபவங்கள் ஒரு படிப்பினையையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கும் என்ற நம்பிக்கையோடு வெளியிடுகிறேன்...

## 250-வது திருமண உதவி



அரிமளம் தே. முருகப்பசெட்டியார் அறக்கட்டளை மற்றும் தே.முரு. உமையாள் ஆச்சி நினைவு அறக்கட்டளையினரின் சார்பில் ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு ரூ.500 வீதம் உதவி வழங்கி வருகிறார்கள். 250-வது திருமண உதவியை அறக்கட்டளைகளின் தலைவர் தே. முருகப்பசெட்டியார் அவர்கள் கீழச்சிவல்பட்டியைச் சேர்ந்த கரு. அழகப்பசெட்டியார் மகள் முத்தாளத்தாளின் தாயார் சின்னக்கருப்பாயி ஆச்சியிடம் வழங்குகிறார்.



தமிழ்நாடு பஸ் உரிமையாளர் சங்க துணைத்தலைவர், தமிழ்நாடு மொத்த மருந்து வணிக சங்கத்தலைவர், தமிழ்மாநில காங்கிரஸின் தஞ்சை நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டவர், தொழிலிலும் அரசியலிலும் சாதனை படைக்கும் 43 வயது இளைஞர்

## வலையபட்டி PL.A. சிதம்பரம்

### அவர்களுடன் ஒரு சந்திப்பு ...

சந்திப்பு : சி. நாகேஸ்வரன்

**குரல் : வணக்கம் சார்... எங்கள் நகரத்தார்குரல் மாத இதழிலிருந்து தங்களை நேர்கண்டு உங்களின் அனுபவங்களையும், தொழிலாற்றும் திறனையும் வெளியிடுவதற்கு சம்மதம் தெரிவித்தமைக்கு குரலின் ஆயிரக்கணக்கான வாசகர்களின் சார்பிலும், எங்கள் ஆசிரியர் மீனாட்சி திருமைந்தர் வி.என். சிதம்பரம் அவர்களின் சார்பிலும் நன்றி சார்...**

அவர் : நகரத்தார்குரல் மாத இதழ் மூலம் என் பேட்டி ஆயிரக்கணக்கான வாசகர்களைச் சென்றடைவதில் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். பெருமைக்குரிய மீனாட்சி திருமைந்தர் வி.என். சிதம்பரம் அவர்களுக்கும் என் நன்றிகள்...

நகரத்தார்குரல் ஒரு சமுதாயத்திற்கு மட்டும் செய்தி சொல்லும் இதழாக இல்லாமல் இலக்கியங்கள், மற்றைய செய்திகள், சாதனையாளர்களின் சந்திப்பு என்று வித்தியாசமான செய்திகளோடு குமுதம், விகடன், கல்கண்டு போன்ற வணிக இதழ்களின் வரிசையினைப் போலவே வருவது மிகவும் அருமை. ஒரு மாத இதழை எப்படி நடத்துவது என்ற ஒரு நெறி அண்ணன் வி.என். சிதம்பரம் அவர்களுக்குத்தான் தெரியும். அவருக்கும் அதில் பணியாற்றும் அத்தனை ஊழியர்களுக்கும் என் நன்றிகளும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்...

**குரல் : தங்கள் சொந்தஊர், கோயில் பற்றிக் கூறுங்களேன்...?**

அவர் : எங்கள் சொந்தஊர் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி வலையபட்டி. கோயில் நேமங்கோயில். உங்கள் ஆசிரியரும் நானும் ஒரே கோயிலைச் சேர்ந்த பங்காளிகள்...

**குரல் : பெற்றோர், உடன்பிறந்தோர் பற்றி...?**

அவர் : தந்தையார் PL.A. அண்ணாமலை செட்டியார். தாயார் அலமேலு ஆச்சி. உடன் பிறந்தவர்கள் என்னோடு ஏழு பேர். அண்ணன் PL.A. பழனியப்பன், தம்பி PL.A. சுப்பிரமணி, சகோதரிகள் நான்குபேர். அனைவருக்கும் திருமணம் முடிந்து விட்டது.

**குரல் : தங்கள் தந்தையார் பற்றிச் சொல்லுங்களேன்...?**

அவர் : எங்கள் தந்தையார் 1955-ல் தஞ்சை மாவட்டத்திற்கு வந்து விட்டார்கள். பஸ் டிரான்ஸ்போர்ட், பெட்ரோல் பங்க், ரோடு காண்ட்ராக்ட் என பல்வேறு

தொழில்களை நடத்தி படிப்படியாக முன்னேறியவர்கள். 1965லேயே மன்னார்குடிக்கும் நாகபட்டினத்திற்கும் முதன்முதலாக பேருந்தை இயக்கியவர் என்ற பெருமை எங்கள் தந்தையாருக்கு உண்டு. 1976லிருந்து நாங்கள் தஞ்சையில் பஸ், மருந்து, வணிகம் என தொழில் தொடங்கலானோம்.

குரல் : என்னென்ன தொழில் புரிந்து வருகிறீர்கள்...?

அவர் : என் சகோதரர்கள், பழனியப்பன், சுப்பிரமணியன் ஆகியோர் கும்பகோணம், திருச்சி, கரூர், சேலம், கோவை போன்ற ஊர்களில் பஸ் உரிமையாளராகவும், மருந்து மொத்த வணிகம் போன்ற தொழில் செய்து வருகிறோம்.

சென்னையில் பவுலோலா இண்டியா லிமிடெட் என்ற பெயரில் மருந்து உற்பத்தி செய்தும் வருகிறோம். தஞ்சையில் பெட்ரோல் பங்க் தொழிலும் செய்து வருகிறோம்.

குரல் : தங்கள் குடும்பம் பற்றி...?

அவர் : என் மனைவி பெயர் அலமேலு. மேலச்சிவல்புரி என் சொந்த ஆச்சி மகள்தான். சுஜி, விஜி, அலமேலு என்று எங்களுக்கு மூன்று பெண்குழந்தைகள். என் மனைவி அலமேலு வீட்டில் குழந்தைகளை கவனிப்பதோடு நின்று விடுவதில்லை. எனக்கும் துணையாக தொழிலிலும் ஈடுபாடு கொண்டு எனக்கு உதவியாக இருந்து வருகிறார்.

குரல் : நகரத்தார் பெருமக்கள் பெரும்பாலும் அரசியலை விரும்புவதில்லையே...?

அவர் : நகரத்தார்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் நாம வந்து "மைனாரிட்டி". நமக்குத் தொழில்தான் முக்கியம். வியாபாரம்தான் செய்யவேண்டும் என்ற வட்டத்திற்குள்ளேயே நின்று விடுகிறார்கள். பிஸ்னஸ் செய்யவேண்டும், பணம் சம்பாதிக்கவேண்டும் என்பதெல்லாம் சரிதான். அதோடு நின்றுவிடாமல் பொதுவாழ்வில் இறங்கி பொதுமக்களுக்கு சர்வீஸும் செய்யவேண்டும் என்ற எண்ணம் வளரவேண்டும். குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால் முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம், முன்னாள் அமைச்சர் ரகுபதி போன்றவர்கள்தான் அரசியலில் பேர் சொல்லும்படியுள்ளவர்கள். மற்ற சமூகத்தை எடுத்துக்கொண்டால் ரெட்டியார்கள் என்றால் கே.என். நேரு, படையாச்சி என்றழைக்கப்படும். வன்னியர்கள் என்றாலும் பெரும்பாலும் அவர்களில் அதிகமானோர் உயர்பதவிகளில் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள். அவர்கள் சமூகத்திற்கு எது வேண்டுமென்றாலும் செய்கிறார்கள்.

குரல் : உங்களுக்கு அரசியல் ஆர்வம் எப்படி...?

அவர் : நான் 1976-ல் தஞ்சைக்கு வந்தேன். அப்போது மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களின் குடும்பத்தோடு சுமார் 15 ஆண்டுகாலமாக நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அவர்களில் குடும்பத்தினரோடு நானும் ஒருவன் என்றளவுக்கு எந்தவித வேற்றுமை இல்லாமல் இருந்து வருகிறேன். அந்த நெருக்கத்தில் தலைவர் மூப்பனார் அவர்கள் விரும்பி அழைத்ததின் பேரில் அரசியலில் ஈடுபடலானேன். மூப்பனார் அவர்கள் மூலமாக தஞ்சை மாவட்ட சேவா தளத் தலைவராக இருந்தேன். தஞ்சை மாவட்ட காங்கிரஸ் பொருளாளராகவும் இருந்திருக்கிறேன்.

1987-ல் நகர் மன்றத்தேர்தலில் தஞ்சை நகர் மன்றத்தின் 34ஆவது வார்டில்

போட்டியிட்டு வெற்றி பெற்றேன். அந்தப்பகுதி மக்களுக்கு அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றி இருக்கிறேன். நான்கைந்து டிரான்ஸ்பார்ம், போர்வெல், ஓவர்டாங்க், டிரைனேஜ் போன்றவை அமைத்திருக்கிறேன். அப்படி அந்தப்பகுதி மக்களிடம் நற்பெயரும் பெற்றிருக்கிறேன். இதுதான் என் அரசியலுக்கு முதல்படி.

குரல் : கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தஞ்சையில் போட்டியிட்டீர்களே...?

அவர் : காங்கிரஸிலிருந்து தமிழ் மாநில காங்கிரஸ் தொடங்கப்பட்டபோது தலைவர் அவர்களோடு இருந்து விட்டேன். இப்போது தஞ்சை மாவட்ட தமிழ்மாநில காங்கிரஸ் பொருளாளராக இருந்து வருகிறேன். மாநில பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறேன். அப்போது தஞ்சை நாடாளுமன்றத்திற்கு தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளராக நின்றேன்.

குரல் : நின்றீர்களா...? நிறுத்தப்பட்டீர்களா...?

அவர் : இல்ல... இல்ல... நான் சீட் கேட்டேன். தலைவர் மூப்பனார் அவர்களும் ஏற்றுக்கொண்டு எனக்கு அந்த வாய்ப்பைத் தந்தார்கள். என் நண்பர்களும், நகரத்தார்கள் பலபேரும் நீங்கள் தேர்தலில் போட்டியிடுங்கள், வெற்றியோ தோல்வியோ அது ஒரு அனுபவமாக இருக்கும் என்று என்னிடம் சொன்னார்கள். நானும் பொதுமக்களுக்கு பணியாற்றுகின்ற அந்த வாய்ப்போடு நகரத்தார் பெருமக்களுக்கும் நம்மால் இயன்ற பணிகளையாற்றலாம் என்ற ஆர்வத்திலும், நிதியமைச்சராக இருந்த ப. சிதம்பரம் அவர்களோடு இணைந்து பணியாற்றலாம் என்ற ஆர்வத்தில் போட்டியிட்டேன். இரண்டு பெரிய கட்சிகளோடு போட்டியிட்டு எழுபதாயிரம் வாக்குகள் பெற்றது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

குரல் : 1996–ல் நடந்த தேர்தலில் போட்டியிட்டு இருந்தால் வெற்றி பெற்றிருப்பீர்களே...? அப்போது ஏன் போட்டியிடவில்லை...? சீட் கேட்டீர்களா...?

அவர் : எனக்கு அந்த நேரத்தில் அரசியல் ஈடுபாடு தீவிரமாக இருந்தாலும் சட்டமன்றம், நாடாளுமன்றத்திற்கெல்லாம் செல்லவேண்டும் என்ற ஆசை இல்லை. என் தொழிலில் முழுக்கவனத்தோடு ஈடுபடவேண்டியிருந்தது. அதனால் அப்போது தவிர்த்தேன். தஞ்சை நாடாளுமன்றத்தொகுதி கூட்டணி கட்சியான தி.மு.க.விற்கு ஒதுக்கப்பட்டு விட்டது. திருமயம் சட்டமன்றத்தொகுதியில் என்னை நிறுத்தலாமென்று தலைவர் அவர்கள்கூட விரும்பினார். என் தொழில் காரணமாக எனக்கு அதில் அப்போது ஆர்வமில்லை...

குரல் : தஞ்சையில் நகரத்தார் வாக்கு வங்கியே இல்லை. எப்படி...?

அவர் : ஆமாம். ஒத்துக் கொள்கிறேன். இன்று எல்லா அரசியல் கட்சிகளும் ஜாதிவாரியாக ஓட்டுவங்கியை வைத்திருக்கிறார்கள். அதன்படியே வேட்பாளரையும் நிறுத்துவார்கள்.

ஆனால் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் அப்படியெல்லாம் பார்க்காத மனோகுணம் கொண்டவர் என்பதற்கு என்னை நிறுத்தியதே சாட்சி...

தஞ்சை நகரை எடுத்துக்கொண்டால் நமது புள்ளிகள் ஒரு 300 அல்லது 400 பேர் இருப்பார்கள் அப்படியிருந்தும் நான் எழுபதாயிரம் வாக்குகள் பெற்றிருக்கிறேன். எங்கள் இயக்கத்தின் மீதும், தலைவர் மூப்பனார் மீதும் மக்கள் கொண்ட அன்பின் காரணமாகவும், நானும் தொகுதி முழுவதும் அறிமுகமானவன். எப்படி என்றால் நான் ரோட்டரி, நகரத்தார்சங்கம், மருந்து வணிகர் சங்கம்,

பஸ் உரிமையாளர் சங்கம் இப்படி பல்வேறு பொறுப்புகளிலும், தமிழ் மாநில காங்கிரஸ் பொறுப்புகளிலும் இருந்து பல்வேறு சமூகப்பணிகள் செய்திருக்கிறேன். மக்களிடம் நன்மதிப்பையும் பெற்றிருக்கிறேன். பொதுவாழ்விலும் சரி, தனிப்பட்ட வாழ்விலும் சரி கோஷ்டிப் பிரச்சனை எதிலும் நான் சிக்குவதில்லை.

தலைவர் மூப்பனார் அவர்கள் எனக்கு அரசியல் ஆசான், வழிகாட்டி எல்லாமே... அவர்கள் இல்லையென்றால் எனக்கு அரசியல் ஆர்வமோ, ஈடுபாடோ எதுவும் வந்திருக்காது.

**குரல் : தேர்தலில் நீங்கள் பெற்ற அனுபவங்கள் எப்படி... ?**

அவர் : உண்மையிலேயே மறக்கமுடியாத அனுபவங்களைப் பெற்றேன். பொதுமக்களை நேரடியாக சந்திக்கும் வாய்ப்பு... அவர்கள் என்னிடத்தில் எப்படிப்பட்ட பணிகளை எதிர்பார்க்கிறார்கள் என்ற என் எதிர்பார்ப்பு கட்சித் தொண்டர்களை எப்படி அணுகுவது... முக்கியப் பிரமுகர்களை எப்படி நமக்கு ஆதரவாகத் திருப்புவது... நண்பர்களை எப்படிப் பயன்படுத்துவது... வெற்றி பெற்றுச் சென்றால் தொகுதியின் எங்கெங்கு என்ன குறைகள் உள்ளது... அதை எப்படி நிவர்த்திப்பது... போன்ற ஆர்வமும், புதுப்புது அனுபவங்களைப் பெற்றேன். தஞ்சை நகரத்தார்கள் ஆற்றிய பணியினை என்னால் மறக்கவே முடியாது. குடும்பம் குடும்பமாக கிராமங்களுக்கென்று எனக்காக வாக்கு சேகரித்த அந்த நிகழ்வு என் மனதில் என்றும் நீங்கா இடம் பெற்ற ஒரு நிகழ்வு...

2001-ல் வரும் சட்டமன்றத் தேர்தலில் திருமயம் தொகுதியில் போட்டியிட வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. தலைமையும், தலைவரும் என்ன சொல்கிறார்களோ அதன்படியே நடப்பேன்.

**குரல் : வெற்றி வாய்ப்பை இழந்தது பற்றி உங்கள் கருத்து... ?**

அவர் : தோல்வி பற்றி நான் கவலைப்படவே இல்லை. ஆனால் ஒருலட்சம் வாக்குகளையாவது பெறுவேன் என்று எதிர்பார்த்தேன். இருபெரும் அரசியல் சக்திகள் களத்தில் தங்களது முழுபலத்தோடு மோதும்போதும் நான் எழுபதாயிரம் வாக்குகள் பெற்றதை பெருமையாகவே நினைக்கிறேன்.

எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் மயிலாடுதுறை முன்னாள் எம்.பி. முன்னணித்தலைவர்கள் எல்லாம் நாற்பதிலிருந்து நாற்பத்தைந்தாயிரம் வாக்குகள்தான் பெற்றிருக்கின்றார்கள். நான் ஒரு புதுமுக வேட்பாளராக நின்று இவ்வளவு வாக்குகள் பெற்றதே பெரிதல்லவா...? ஆனால் வரும் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது.

**குரல் : அரசியல் தலைவர்களில் யாரைச் சந்தித்திருக்கிறீர்கள் ?**

அவர் : ராஜீவ்காந்தி அவர்கள், தஞ்சை சுற்றுப்பயணம் வந்தபோது அவருடன் நிகழ்ச்சிகளில் கலந்திருக்கிறேன். அவரோடு உணவருந்தியிருக்கிறேன். அந்த ஒருநாள் சுற்றுப்பயணத்தில் அவருடன் இருந்த அந்த மணித்துளிகள் மறக்க இயலாத ஒன்று. அப்புறம் ப. சிதம்பரம், அருணாச்சலம், எஸ்.ஆர்.பி. எதிர்கட்சித்தலைவர் சோ. பாலகிருஷ்ணன் போன்றவர்களோடு அறிமுகமாகி இன்றுவரை நல்ல நட்பும், அன்பும் வைத்திருக்கிறேன்.

மாற்றுக்கட்சி என்றால் ம.தி.மு.க. அவைத்தலைவர் எல். கணேசன் உள்ளாட்சித்

91/1


உள்ளம் மகிழும் தங்கம் . . .
இல்லம் வந்து தங்கும் . . .
INTERNATIONAL
·916
STANDARD
VSP
தங்க மாளிகை
2611–12, தெற்கு ராஜவீதி, புதுக்கோட்டை.
போன்: 22271 – 26224

துறை அமைச்சர் கோ.சி. மணி, முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சர் முத்துச்சாமி, திருநாவுக்கரசு ஆகியோருடனும் நல்ல நட்புடன் பழகி வருகிறேன்.

குரல் : **பல்வேறு தொழில்களிலிருந்து கொண்டு அரசியலுக்கு எப்படி நேரம் கிடைக்கிறது?**

அவர் : உண்மைதான். ரொம்ப ரிஸ்க் தான். அதுவந்து எனது தந்தையார் அவர்களின் வழிகாட்டுதல் என்றுதான் சொல்லவேண்டும். முக்கியமாக இன்னொன்று... எங்களது நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களால்தான் நான் இப்படி பொதுவாழ்வில் கவனம் செலுத்தமுடிகிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

பணியாளர்கள் 95 சதவீதம் சின்ஸியாரிட்டியோடு பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு நான் நல்ல சம்பளம், போனஸ், வருட லாபத்தில் ஒரு சதவீதம், வீடு, வாகன வசதியெல்லாம் மகிழ்வோடு வழங்குகிறேன். அவர்களும் மகிழ்ச்சியோடும், சின்ஸியாரிட்டியோடும் முழு ஈடுபாட்டோடு பணியாற்றி வருகிறார்கள்.

நான் இருந்தால் எப்படி பணிகள் எல்லாம் நடக்குமோ... அதேபோல நான் இல்லையென்றாலும் பணிகளில் எந்தவிதத் தொய்வுமின்றி நடந்து கொண்டிருக்கும். நான் வர முடியவில்லை என்றால் என்னைத் தொடர்பு கொண்டு தினந்தோறும் ஒவ்வொரு நிறுவனத்தின் அன்றைய கணக்கு, வரவு, செலவு விபரங்களை போனில் தெரிவித்து விடுவார்கள். மறுநாள் அலுவலக நடவடிக்கைகளுக்கு கைடுலைன் கொடுத்து விடுவேன். என் நிர்வாகத்தில் உள்ள நிறுவனங்களில் மட்டும் சுமார் 144 பேர் பணியாற்றுகிறார்கள். இதில் 50 சதவீதம் பேர் நகரத்தார் என்பதையும் பெருமையோடு சொல்வேன்.

குரல் : **நகரத்தார் இளைஞர்கள் வேலைக்குச் செல்வதற்கு தயங்குவது பற்றி...?**

அவர் : தொழில் முனையவேண்டும் அதுதான் முக்கியம். ஆனால் அதற்காக நிதி வசதி இல்லாதவர்கள் வேலைக்குச் செல்வது ஒன்றும் தவறில்லை. இதில் எதற்கு தயக்கம் காட்டுகிறார்கள் என்பதே என் கருத்து. படித்துவிட்டு சும்மா இருப்பதை விட இப்படி தனியார் நிறுவனங்களில் பணியாற்றி அனுபவங்களைப் பெறுவது நல்லது. நாளைக்கு அவரே ஒரு சொந்தத் தொழில் முனையும்போது அந்த அனுபவங்கள் ஒரு வழிகாட்டுதலாக நிச்சயம் இருக்கும்.


எங்களது பஸ் கம்பெனியில் எஸ்.எஸ்.எல்.ஸி., படித்து லைசென்ஸ் எடுத்து பணியாற்றும் இளைஞர்களுக்கு மாதம் சம்பளம் ரூ. 2900-00மும், அதுபோக தினசரி கலெக்சன் படி என்று ரூ. 1000-00க்கு ரூ. 3-00 வீதமும் கொடுக்கிறேன். நமது நகரத்தார் இளைஞர்கள் ஏழ்மையில் இருந்து கண்டக்டர், டிரைவர் பணிக்கு வந்தால் மாதந்தோறும் நாலாயிரத்திலிருந்து ஐயாயிரம் வரை சம்பாதிக்கலாம். இதுவுமே மாதம் 14 அல்லது 15 டியூட்டி பார்த்தாலே போதும். இந்தப்பணியை நமது இளைஞர்கள் தயக்கமில்லாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். எனவே எஸ்.எஸ்.எல்.ஸி... +2 படித்துவிட்டு இருப்பவர்கள் என்னிடம் வந்தால் நானே கண்டக்டர் லைசன்ஸ் எடுத்துக்கொடுத்து பணியிலும் அமர்த்திக் கொள்வேன் என்பதையும் நகரத்தார்குரல் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் பஸ்களில் கண்டக்டர் தேவை அதிகமாக உள்ளது. என் நிர்வாகத்தில் 13 பஸ்களும், என் சகோதரர்களின் நிர்வாகத்தில் தலா 8 பஸ்களும் இயங்கி வருகிறது.



தொடர்ச்சி 36ஆம் பக்கம்





பிஎல்.ஏ. சிதம்பரம், துணைவியார் அலமேலு...



தந்தையார் பிஎல்.ஏ. அண்ணாமலை செட்டியார்
தாயார் பிஎல்.ஏ. அலமேலு ஆச்சி...





பிஎல்.ஏ. சிதம்பரம் அவர்களின் குழந்தைகள்
விஜி, சுஜி, அலமேலு...




தமிழ்நாடு மொத்த மருந்து வணிக சங்க தலைவராகப்
பொறுப்பேற்கிறார்....



தஞ்சை நாடாளுமன்ற வேட்பாளர்
பீஎல்.ஏ. சிதம்பரம் தேர்தல் பிரச்சாரம்...



தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தின் ஒரு பகுதி...



சிங்கப்பூரில் சகோதரி எஸ்பீ.ஏ. மீனாட்சி ஆச்சி
குடும்பத்தினரோடு பீஎல்.ஏ.சிடி...




அமெரிக்கா சென்றபோது
சுதந்திரதேவி சிலை அருகே...



பிஎல்.ஏ. காம்ப்ளக்ஸ் திறப்புவிழாவில் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களோடு பிஎல்.ஏ. சிதம்பரம்...



முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்களோடு பிஎல்.ஏ. சிதம்பரம்...



மறைந்த திராவிடப் பல்கலைக்கழகம் டாக்டர். நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களோடு நமது ஆசிரியர்...




தமிழக முன்னாள் அமைச்சர், கலைமாமணி, கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் "வண்ணத்தோகை" கவிதை தொகுப்பு வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. தமிழக பால்வளத்துறை அமைச்சார் மாண்புமிகு சுந்தரம் அவர்கள் நூலினை வெளியிட நமது ஆசிரியர் வி.என். சிதம்பரம் அவர்கள் பெற்றுக்கொள்கிறார். அருகில் நூலாசிரியர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் மற்றும் பலர் உள்ளனர்.

# திராவிடப் பல்கலைக்கழகம்...!

**வி.என். சிதம்பரம்**

நாவலர் நெடுஞ்செழியன் மறைந்து விட்டார். ஒரு நடமாடும் தமிழ் பல்கலைக்கழகம் சரிந்தது. அகநானுறையும், புறநானுறையும் இன்னும் பிற தமிழ் இலக்கியங்களின் படைப்புகளை தமிழருக்குத் தந்த அமுதசுரபி காலதேவனால் களவாடப்பட்டது.

தன் மேடைப் பேச்சின் பிரவாகத்தால் தமிழ் நெஞ்சங்களில் தமிழைப் பதித்தவர்.

தந்தை பெரியாரின் மாணவனாய், பேரரறிஞர் அண்ணா அவர்களின் வாஞ்சைமிகு தம்பியாய், தம்பி வா...! தலைமை ஏற்கவா...! என்று பேரரறிஞரால் அழைக்கப்பட்ட பெரும்பேறு பெற்றுத் திகழ்ந்தவர்.

தொடக்க கால திராவிட இயக்கத்தின் ஐம்பெரும் தலைவர்களில் ஒருவராய்... நான்கு முதல்வர்களின் அமைச்சரவைகளில் கல்வி அமைச்சராய், நிதி அமைச்சராய் அவையின் முன்னவராய்... பணியாற்றும் நிர்வாகத்திறன் கொண்டு விளங்கிய திராவிடப்பல்கலைக்கழகம் நாவலர் அவர்கள்.

நான் அவரோடு ஒரு இருபத்தைந்து ஆண்டுகாலம் நண்பனாய்ப் பழகியவன். ஒருமுறை அவர் நிதியமைச்சராக இருந்தபோது நான் அவரைக் காணச் சென்றேன். எழுந்து நின்று என்னை அவர் வரவேற்ற விதம் கண்டு நான் மெய் சிலிர்த்தேன். தமிழக அமைச்சரவையின் ஒரு மூத்த அமைச்சரான அவரின் அந்த எளிமையே அவரின் சிறப்பு. இவர் தனக்கென்று அரசியலில் கோஷ்டி உருவாக்கிக் கொள்ளாத வித்தியாசமான அரசியல்வாதி...

நண்பர்களோடு அவர் உரையாடும்போது அவரிடமிருந்து வந்து விழும் நகைச்சுவை கண்டு சிரித்து மகிழ்ந்த அந்த இனிய நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். கண்கள் குளமாகிறது.

அவரது துணைவியார் திருமதி. விசாலாட்சி அவர்கள் தீவிரமான மேல்மருத்தூர் ஆதிபராசக்தியின் பக்தை. பங்காரு அடிகளார் அவர்களின் சீடராக விளங்கி வருபவர்கள்.

தான் ஒரு சுயமரியாதை இயக்கவாதியாகவும், கடவுள் மறுப்புக் கொள்கையில் தீவிரவாதியாக இருந்தாலும் தன் மனைவியின் கொள்கையில் கண்டிப்புக் காட்டாதவர். நான் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் 9 ஆண்டுகாலம் தக்காராக இருந்திருக்கிறேன். நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் ஆலயத்தைப் பற்றியோ, ஆன்மீகத்தைப் பற்றியோ ஒரு வார்த்தைகூட கேட்கமாட்டார். மற்றைய விபரங்களை எல்லாம் இருவரும் பேசுவோம்.

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு அவரது துணைவியார் விசாலாட்சி அம்மையார் அவர்களும் அடிக்கடி வருவார். நானும் வரவேற்றுச் சிறப்பிப்பேன். அவர்களுடன் பேசிப் பழகியதில் அவரின் குடும்பத்தோடு ஒன்றிவிட்ட ஓர் உணர்வைப் பெற்றேன்.

இப்படி நான் பழகிய மரியாதைக்குரிய நண்பராய்த் திகழ்ந்த தமிழின் சிகரங்களைத் தொட்டுவிட்டுவந்த தமிழர்களின் டென்சிங் அண்ணன் நாவலர் அவர்கள்.

அந்த நெடிதுயர்ந்த நெடுஞ்செழியத் தமிழை இனி எப்போது கேட்பேன்...? மரணம் எனும் சம்பவங்கள் நிகழும்போது துக்கங்கள் நெஞ்சை அடைக்கின்றது. தமிழின் சரித்திரப் பக்கம் கிழிந்து போனது. அவரை இழந்து வாடும் துணைவியார் திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் அவர்களுக்கும் மற்றும் குடும்பத்தாருக்கும், அவரின் இயக்கத்திற்கும் என் ஆழ்ந்த இரங்கலை கண்ணீரோடு காணிக்கையாக்குகின்றேன்.

30ஆம் பக்கத்தொடர்ச்சி...

**குரல் : நகரத்தார் சங்கப்பொறுப்புகளில் நீங்கள் ஆற்றிய பணிகள்...?**

அவர் : 1983-ல் தஞ்சை நகரத்தார் சங்கம் தொடங்கப்பெற்றது. அப்போதே திரு. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் சங்கத்திற்கென இடம் வாங்கி வைத்திருந்தார்கள். நான் பொறுப்பேற்ற பிறகு கட்டடம் கட்டுவதற்கு நிதி திரட்டி கட்டடம் உருவாக உதவியிருக்கிறேன். கட்டடத்தின் ஒரு பகுதியை எங்கள் தந்தையார் அண்ணாமலை செட்டியார் நினைவாக கட்டிக் கொடுத்திருக்கிறேன். நானும் செயலாளருமாகச் சேர்ந்து மருத்துவமுகாம்கள், சமூகப்பணிகள் பல செய்திருக்கிறேன். 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு தேர்வில் தஞ்சை மாவட்டப் பள்ளிகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு தங்கமோதிரம் வழங்கிவரும் வழக்கத்தை கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து செய்து வருகிறேன். அதை என் தந்தையார் நினைவாக வழங்கி வருகிறேன்.

**குரல் : வெளிநாட்டு அனுபவங்களைக் கூறுங்களேன்...?**

அவர் : ஆண்டுதோறும் ஏதாவதொரு நாட்டுக்கு சென்று வருவேன். அமெரிக்காவில் ஒருமாதம் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங், பாங்காங், லண்டன், துபாய், சௌதி போன்ற நாடுகளுக்கெல்லாம் குடும்பத்தோடு சென்று வந்திருக்கிறேன்.

**குரல் : நமது நாட்டிற்கும் நீங்கள் சென்று வந்த நாடுகளுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூறலாமா...?**

அவர் : நமது நாட்டை விட அயல்நாடுகள் ரொம்ப அட்வான்ஸ் ஆக இருக்கு. கண்டக்டர் இல்லாமல் பஸ் ஓடுவது. டெலிபோன்ஸ் எல்லாம் கார்டு சிஸ்டம் என்று ரொம்ப அட்வான்ஸ் ஆக இருக்கு. பஸ்ஸில் பயணம் செய்பவர்களும் ரொம்ப நேர்மையாக நடந்து கொள்கிறார்கள். ஃப்ரீ பெய்ட் கார்டை வாங்கிக் கொள்கிறார்கள். பஸ்ஸில் இன்ஸர்ட் செய்துவிட்டு பயணம் செய்கிறார்கள். பஸ்ஸில் உள்ள எந்திரத்தில் (டிக்கெட் பெட்டி) பணத்தை அவர்களே போட்டு விட்டு டிக்கெட் எடுத்துக் கொள்கிறார்கள். இதை மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் பார்த்து வியந்திருக்கிறேன்.

நமது நாட்டில் இந்த மாதிரி வருவதென்றால் ரொம்பவும் கஷ்டம்தான். அவர்கள் ஒரு வழியில் ஏறி, மறு வழியில்தான் இறங்குறாங்க. ஆனால் இங்க... காசு கொடுத்து டிக்கெட் பெறாமல் ஏறி இறங்கிச் செல்பவர்களை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். அந்த அளவிற்கு நாம் வளர்ச்சி பெறவில்லை.

**குரல் : பஸ் உரிமையாளர் சங்கத்தின் மாநிலத் தலைவராக இருக்கிறீர்களா...?**

அவர் : இல்லை மாநில துணைத்தலைவராக இருந்து வருகிறேன். அந்தச் சங்கத்தின் சார்பில் ரூ. 10 கோடி முதலீட்டில் நடந்து வரும் நிதி நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டராகவும் இப்போது என்னைத் தேர்ந்து எடுத்திருக்கிறார்கள். தமிழகம் எங்கும் உள்ள சுமார் 6000 பஸ் உரிமையாளர்கள் உறுப்பினர்களாக உள்ள அந்த நிதி நிறுவனம் சென்னையில் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ளது. தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு குறைந்த வட்டியில் நிதிஉதவி செய்யும் நிறுவனம் அது.

**குரல் : பஸ் கட்டண உயர்வைப் பற்றி தங்கள் கருத்து...?**

அவர் : பஸ் கட்டண உயர்வு இப்போது தவிர்க்க இயலாதது. முன்பெல்லாம் டீஸல்

லிட்டருக்கு 50 பைசா, ஒரு ரூபாய் என்ற அளவில்தான் உயரும். ஆனால் இப்போது உலக மார்க்கெட்டிலே டீஸல், பெட்ரோல் விலை நிர்ணயிக்கப்பட்டதால் லிட்டருக்கு நான்கு ரூபாய் உயர்ந்து விட்டது. இது 40 சதவீத உயர்வாகும். ஒரு பஸ்ஸுக்கு ஒரு நாளைக்கு 150 லிட்டர் டீஸல் வேண்டும். ஆக ரூ. 600-00 (150X4=600) உயர்வு ஒரு பஸ்ஸுக்கு அதிகம் தானே! இந்தக் கட்டண உயர்வை தவிர்க்க இயலாததுதான். வேறு வழியும் இல்லை.

ஆனால் அரசியல்வாதிகள் ஓட்டுக்காக என்ன செய்வாங்கன்னா அப்பப்ப ஒரு கி.மீ. க்கு ஒரு பைசா இரண்டு பைசா என்று உயர்த்துவாங்க. உதாரணமாக தஞ்சையிலிருந்து திருச்சி 60 கி.மீ. 10 ரூபாய் கட்டணம். 1 கி.மீ. க்கு ஒரு பைசா கட்டண உயர்வு என்றால் 60 பைசா தான் வரும். இது பயணிகளை அவ்வளவு பாதிக்காது. கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு கட்டணத்தை உயர்த்தவில்லை. ஒரே நேரத்தில் கி.மீ.க்கு 4 பைசா என்று உயர்த்த வேண்டியதாகிறது. இனிவரும் அரசானாலும் இப்போதுள்ள அரசானாலும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் இந்தக் கட்டண உயர்வை கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தினால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாது என்பது என்னுடைய கருத்து.

குரல் : அரசு போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குவதால் தனியார் இயக்கலாம் என்ற கருத்தைப் பற்றி...?

அவர் : நிச்சயமாக இயக்கமுடியும். நாங்களும் ஓரளவு லாபத்தில் தானே இயக்கி வருகிறோம். அரசுக்கு ஒரு பஸ்ஸுக்கு மாதம் ரூ. 26,000-00 வரி கட்டி வருகிறோம். அந்த வரியை தனியாரிடம் ஒப்படைத்துப் பெற்றுக் கொள்ளலாமே. அரசுக்குத் தேவை பொதுமக்களுக்குப் பயன்படும் விதத்தில் பஸ்கள் இயங்க வேண்டும். வரியும் செலுத்தவேண்டும். அதை நாங்கள் சரியாகச் செய்வோமே... அரசும் நட்டத்தில் இயங்காதே...

இதுபோன்ற நடைமுறை இப்போது டெல்லியில் உள்ளது. எப்படி என்றால் வேலையில்லாதப் பட்டதாரிகளிடம் அரசு பஸ்ஸை லீசுக்குக் கொடுத்து வரியை அவரே கட்டிக் கொள்வது. அரசு பெயரிலேயே பஸ் ஓடும். பப்ளிக் சர்வீஸும் இருக்கும். வேலை வாய்ப்பை அவர்களுக்கு அளித்ததாகவும் அமையும். அந்த நடைமுறையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பரிசீலனை செய்வார் என நினைக்கிறேன்.

குரல் : அரசு பஸ்கள் எல்லாம் ரொம்ப பழையதாக இருக்கிறதே...?

அவர் : உண்மைதான்... என்னவென்றால் நாங்கள் வங்கியில் கடன் வாங்கி புதிய பஸ்ஸை இறக்குகிறோம். மூன்று வருடத்தில் வுங்கிக்கடனைச் செலுத்தி விடுகிறோம். மறுபடி கடன் பெற்று புதிய பஸ்ஸை இறக்குகிறோம். அப்போது எங்களுக்கு "Income Tax Depreciation" கிடைக்கிறது. புதிய பஸ்ஸை மக்களும் விரும்பி ஏறுகிறார்கள். அதனால் எங்களுக்கு பஸ்ஸில் எந்தவித பிரேக்டவுனும் ஏற்படுவதில்லை.

ஆனால் அரசு பஸ்கள் சுமார் ஏழு லட்சம் கி.மீ. ஓடினால்தான் ஒரு பஸ்ஸை மாற்றம் செய்ய வேண்டும் என்று ஒரு திட்டம் உள்ளது. அதனால அரசு போக்குவரத்து கழகங்கள் உதிரிபாகங்களை மாற்றி மாற்றி ஓட்டவேண்டியுள்ளது. அவங்களால எங்களைப்போல பஸ்ஸை மாற்ற முடியவில்லை. ஒரு பஸ்ஸை கட்டாயம் ஏழு, எட்டு வருடங்களுக்கு ஓட்டவேண்டிய நிலை உள்ளது.

குரல் : தங்களின் மனங்கவர்ந்த தலைவர்கள்...?

அவர் : அன்னை இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி, பெருந்தலைவர் காமராஜர், அறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்...

குரல் : மூப்பனார் – ப. சிதம்பரம் பற்றி...?

அவர் : தலைவர் மூப்பனார் அவர்களிடம் பிடித்தது அவருடைய பிரஸன்ஸ் ஆஃப் மைன்ட். என்னை எங்கேயாவது பார்த்துவிட்டால் என்ன... சிதம்பரம் என்று பேர் சொல்லி அழைப்பார். என்னைப்போலவே சாதாரண தொண்டர்களையும் அவர் பெயர் சொல்லி அழைப்பதைக் கண்டு வியந்திருக்கிறேன். ரொம்ப நேர்மையானவர். அவர் இல்லத்திற்குச் சென்றால் கூல்டிரிங்ஸ், காபி எதுவும் அருந்தாமல் வெளியே அனுப்பமாட்டார். வாசல்வரை வந்து வழி அனுப்பி வைக்கும் பண்பாடு நிறைந்தவர். பரம்பரையாக அந்தக்குடும்பம் பாரம்பரியம் மிக்கது. சுந்தரப்பெருமாள் கோயிலிலோ, கபிஸ்தலத்திலே பார்த்தீர்களானால் ஆடம்பரமில்லாத அந்த அரண்மனை போன்ற வீடுகளில் தினசரி ஒரு நூறு பேராவது சாப்பிட்டுச் செல்வார்கள்...

அதைப்போலவே ப. சிதம்பரம் அவர்கள். மிகச்சிறந்த நிர்வாகி என்றால் அவர்தான். உலகத்திலேயே சிறந்த பொருளாதாரமேதை என்றுகூடச் சொல்வேன். அவர் அமைச்சர் பொறுப்பில் இருந்தபோது எங்களைப் போன்ற தொழில் அதிபர்களுக்கெல்லாம் வாய்ப்புத் தந்தார்கள். நேர்மையாக தொழில் செய்யவேண்டும், ஒழுங்காக வரி செலுத்தவேண்டும் என்று தாமாக முன்வந்து வரி கட்டும் திட்டத்தினைத் தீட்டி பல்லாயிரம் கோடி கருப்புப் பணத்தை வெளியே கொண்டு வந்தார்கள். அவர் தொடர்ந்து 5 ஆண்டுகள் பதவி வகித்திருந்தாலே இந்தியா பொருளாதார வளர்ச்சியில் ஒரு தன்னிறைவைப் பெற்று ஒரு புதிய பாதையை நோக்கி இந்தியாவை அழைத்துச் சென்றிருப்பார். வளர்ந்த நாடுகளோடு இந்தியாவும் ஒன்று என்ற நிலைக்கு உயர்த்திருப்பார்.

குரல் : நகரத்தாரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்ற கருத்து பற்றி...?

அவர் : ஆமாம். உண்மையிலேயே வரவேற்கக் கூடிய கருத்து. ஆனால் அரசு நகரத்தாரையும், பிராமணர்களையும் Forward என்று கருதுகிறது. ஆனால் நகரத்தார் 90 சதவீதம் பேர் வறுமையில் வாடுகிறார்கள். அரசு பதவிகளில் அவர்கள் அமருவதற்கு எல்லா திறமையும் இருந்தும் இடஒதுக்கீட்டுப் பிரச்சனையால் அவர்கள் முன்னேற்றம் தடைபடுகிறது. நானும் தலைவர் மூப்பனாரிடம் சொல்லி நகரத்தாரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பாடுபடுவேன்.

இன்னொன்று எல்லா சமூகத்தலைவர்களுக்கும், சாதனையாளர்களுக்கும் அஞ்சல்தலை வெளியிடப்படுகிறது. கல்வி வள்ளல் பாரிஸ்டர் அழகப்பசெட்டியார், கவியரசு கண்ணதாசன் ஆகியோரின் அஞ்சல்தலை வெளியிடவும் தலைவர் மூப்பனார், ப. சிதம்பரம் இவர்களோடு இணைந்து நான் ஏற்பாடு செய்வேன்.

குரல் : நகரத்தார் இளைஞர்களுக்கு தங்கள் அறிவுரை என்ன...?

அவர் நமது இளைஞர்கள் தொழில் முனையவேண்டும். இல்லையெனில் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளவேண்டும். "வாய்ப்புகளால் உருவானவனல்ல மனிதன். வாய்ப்புகளை உருவாக்குபவனே மனிதன்" என்பதை மெய்ப்பிக்க

வேண்டும். திருமண சீதனம், வரதட்சணை இவற்றையெல்லாம் கேட்டுப் பெறக்கூடாது என்பதையும் ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன். வளமையான இந்தியாவை உருவாக்க நமது நகரத்தார் இளைஞர்கள் தன்னம்பிக்கையோடு எழுவேண்டும்.

குரல் : எங்கள் ஆசிரியருக்கும் தங்களுக்கும் உள்ள நட்பைப் பற்றி...?

அவர் : நானும் உங்கள் ஆசிரியர் அண்ணன் வி.என். சிதம்பரம் அவர்களும் ஒரே கோயிலைச் சேர்ந்த பங்காளிகள் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். எங்கள் இல்ல விழாக்களில் எல்லாம் அவர் இல்லாமல் நடக்காது. அவர்களும் நாங்களும் நல்ல நலம்விரும்பிகள் என்பது எனக்குப் பெருமையாக உள்ளது.

நன்றி பரிமாற்றங்களோடு விடை பெற்றுக் கொள்கிறோம்...!

---

## தைப்பூச விழா

மும்பை நகரத்தார் சமுதாயப் பண்பாட்டுச் சங்கத்தின் சார்பில் நாசிக் நகர் பஞ்சவடியில் அமைந்துள்ள அருள்மிகு கார்த்திகேயசுவாமி ஆலயத்தில் தைப்பூசவிழா 21-1-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. கோதாவரி நதியிலிருந்து புனிதநீர் கொண்டு வந்து அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றது. நகரத்தார் பெருமக்களும் உள்ளூர் பெரியவர்களும் கலந்து கொண்ட இந்த விழாவில் பக்தர்கள் பால்காவடி, சர்க்கரை காவடி எடுத்தனர். சங்கத்தின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

## வள்ளல் அழகப்பசெட்டியார் அவர்களின் கையெழுத்தைக் காணுங்கள்....

RM. ALAGAPPA CHETTIAR, M.A.,
BARRISTER-AT-LAW.

PUDUKAD MILLS. P.O.
COCHIN STATE.

A. V. AL. M. RAMANATHAN CHETTIAR
MADRAS
Replied 12 MAY 1943

10th May 1943.

அன்புள்ள [illegible]வுக்கு.

தம்பி உமையாளுக்கும் ஆச்சிமகன் அய்யாவுக்கும் கல்யாணம் செய்வதாக வைகாசி [illegible] நிச்சயதார்த்தம் செய்து கொள்வதாய் தீர்மானித்திருக்கிறது. தாங்களும் மக்களும் முன்னதாகவே ஊர் வந்து சேரும்படி செய்ய வேண்டியது. கல்யாணம் தங்கள் குழந்தைகள் கல்யாணமாக பாவித்து சிறப்பாக நடத்தி வைக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்
அண்ணன் அழகப்பன்

# காணக்கிடைக்காத காட்சி...



ஒரு விழாவில் அன்றைய கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாஷ் அவர்களோடு பாரிஸ்டர் அழகப்பசெட்டியார் பங்கேற்ற காட்சி...



மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களோடு அழகப்பசெட்டியாரின் மகள் உமையாள் ஆச்சியும், மருமகன் ராமனாதன் அவர்களும் ஒரு விழாவில் சந்தித்தபோது...

# சிரிப்போம் ...! சிந்திப்பதற்காக ...!

முனைவர். கு. ஞானசம்பந்தன்

8

**பு**த்தாண்டும் பிறந்து, பொங்கலும் வந்து சென்று விட்டது. இளவேனில் தொடங்குகின்ற காலம். கிராமங்கள்தோறும் விழாக்கள் தோரணம் கட்டத் தொடங்கிவிடும். நாடகங்கள், பட்டிமன்றங்கள் விடியவிடியக் கிராமத்துத் தெருக்களில் காணலாம்.

நாடகமேடை நகைச்சுவைகள் மிகவும் இனிமையாக இருக்கும். கலைவாணர் காலத்தில் நடந்ததாக ஒரு நகைச்சுவையைச் சொல்லுவார்கள். புதிய நடிகர் ஒருவர், அவர் நாடக ஒத்திகையின்போது மிக அருமையாக நடிப்பார். வசனம் பேசுவார். ஆனால் மேடைக்கு வந்து மக்களைப் பார்த்துவிட்டால் போதும், நடுக்கம் வந்து சிரமப்படுவார். அவர், கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களிடம் வந்து, "ஐயா இந்த மேடை நடுக்கம் போக என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

உடனே கலைவாணரும், "ஒண்ணும் கவலைப்படக்கூடாது. வசனம் பேசும்போது ஒரேயடியாக ஜனங்களைப் பார்த்துப் பேசவும் கூடாது. கூட நடிக்கும் நடிகர்களையே பார்த்தும் பேசவும் கூடாது. அங்கே ஒரு வசனம் இங்க ஒரு வசனம்- நடிப்பு வந்துடும்" என்றார்.

வந்தது வினை! அந்த நடிகர் அடுத்த நாள் நாடகத்தில் அர்ச்சுனனாக வில், அம்போடு வந்தார். யுத்தக்காட்சியில் ஒரு அம்பை மேடையில் போட்டு விட்டு, அடுத்த அம்பை ஜனங்களை நோக்கிப் போடவும் எல்லோரும் அலறியடித்து ஓடினார்கள். என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஒரு கூட்டத்தில் இதனைக் கூறி, "அறிவுரை சொல்லும்போதுகூட சரியான ஆளைப் பார்த்துக் கூறவேண்டும்" என்றார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் "நீதிதேவனின் மயக்கம்" என்றொரு நாடகம். அண்ணா அவர்களே எழுதி அதில் இலங்கேஸ்வரனான இராவணனாக நடித்தார். நாடகப்படி இராவணனை நீதிமன்றத்திலே வைத்து நீதிதேவன் விசாரணை நடத்தும் காட்சி. ஸ்ரீராமன் மனைவியாக ஸ்ரீ சீதாப்பிராட்டியைக் கவர்ந்து சென்ற குற்றவாளி என்று வழக்கு நடக்கிறது.

அண்ணா இராவணனாகத் தோன்றி மிக வேகமாக வசனம் பேசி அடுக்குமொழியால் அரங்கத்தை அதிர வைத்துக் கொண்டிருக்கிறார். நீதிதேவனாக நடித்தவர் சமீபத்தில் மறைந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள். அண்ணா அவர்கள் வசனம் பேசிய வேகத்தைப் பார்த்த நாவலர் அப்படியே அசந்து அமர்ந்து விட்டார். பதில் வசனம் பேசவில்லை.

உடனே அண்ணா அவர்கள், "நீதிதேவனே ஏன் மௌனமாய் இருக்கிறீர், உமக்கு மறந்து போயிருக்கும், நீதி மறந்து போயிருக்கும், நேர்மை மறந்து போயிருக்கும்... ஏன் எல்லாமே மறந்து போயிருக்கும்" என்று அவர் வசனத்தை மறந்து போன செய்தியை நினைவூட்டிப் பேசபேச மக்கள் புரிந்து கொண்டு ஆரவாரம் செய்தார்களாம்.

இந்த நினைவூட்டுதலுக்கு ஒரு நகைச்சுவை உண்டு. வெளியூருக்குச் சென்றிருந்த கணவனுக்கு, மனைவி கடிதம் ஒன்ற எழுதினாளாம்.

அன்புக் கணவனுக்கு,

உங்களைப் பிரிந்ததிலிருந்து வருத்தத்தோடு இருக்கிறேன். உங்களைக் காணப் பிரியத்தோடு உள்ளேன். உங்களை எதிர்பார்த்ததோடு...

கடிதத்தைப் படித்த கணவன் புரிந்து கொண்டான். மனைவி ஊருக்குச் செல்லும்போது "தோடு" வாங்கி வரச் சொன்னாள் என்பதை நினைவூட்டும் கடிதம்தான் இது என்று.

ஒரு திருமண வீட்டிற்குக் கணவனும், மனைவியும் சென்றார்கள். போய் அமர்ந்ததும் அனைவருக்கும் குளிர்பானம் கொடுத்தார்கள். கணவன் குடித்தபின், நேராகக் குளிர்பானம் கொடுக்கும் இடத்திற்குப் போய் பலமுறை அதை வாங்கி வந்து குடித்துக் கொண்டேயிருந்தான்.

மனைவிக்குக் கோபம் வந்து விட்டது. "இப்படி பலமுறை வாங்கி வந்து குடிக்கிறீர்களே, அவர்கள் உங்களைத் தவறாக நினைக்க மாட்டார்களா?" என்றாள்.

"நினைக்க மாட்டார்கள்" என்றான் கணவன்.

"ஏன்" என்றாள் மனைவி எரிச்சலுடன்.

"ஏனென்றால், ஒவ்வொருமுறை குளிர்பானத்தை வாங்கும்போதும், என் மனைவிக்குத்தான் என்று உன் பெயரைச் சொல்லித்தானே வாங்கி வருகிறேன்" என்றானாம்.

ஒரு பேருந்து வேகமாகப் போய் விபத்துக்குள்ளாகி விட்டது. ஆளுக்கு ஒரு பக்கம் சிதறிக் கிடந்தார்கள். இரவு நேரம் இருட்டு. ஒருவன் கையைக் காணவில்லை என்று அலறினான். ஒருவன் காலைக் காணவில்லை என்றான். அதற்குள் கண்டக்டர், "என் காதைக் காணோம், காதைக் காணோம்" என்று கத்த, பயணம் செய்த ஒருவன் இருட்டில் ஒரு காதைத் தேடிக் கொண்டு வந்து, "இந்தக் காதா?" என்று கேட்டான்.

கண்டக்டர் உடனே, "இல்லை இது என்காதில்லை" என்றார், சொல்லி விட்டு "என் காதில் பேனா சொருகி வைத்திருந்தேன். அதுதான் என் காது" என்றாராம்.

– அடுத்த வாரமும் சிரிப்போம்

## திருக்குறள் உரைநூல் அறிமுகவிழா...!



*தமிழறிஞர் சாலமன் பாப்பையா எழுதிய திருக்குறள் உரை நூல் அறிமுகவிழா மதுரையில் நடைபெற்றது. விழாவில் சாலமன் பாப்பையா, தமிழருவி மணியன், பேராசிரியர் பா. நமச்சிவாயம் ஆகியோருடன் ஆசிரியர்... விழா ஏற்பாடுகளை கண்ணதாசன் நற்பணிமன்றம் சார்பில் ஆர். சொக்கலிங்கம் செய்திருந்தார்.*



**மை**சூர் மகாராஜா திரு. ஜெயராமராஜ உடையார் அவர்கள் தமிழ்நாட்டின் கவர்னராக இருந்தபோது மனஅமைதி வேண்டி சென்னையிலிருந்து பிள்ளையார்பட்டிக்கு அடிக்கடி வருவாராம். கற்பகவிநாயகர் அவருக்கு மனஅமைதியும், நிம்மதியும் வழங்கியதைப் பூரித்துப்போய் மற்றவர்களிடமும் சொல்வாராம்.. அவர் 1965-ல் பிள்ளையார்பட்டிக்கு வருகை தந்தபோது எடுத்தபடம்...



# கனீர் கவிஞர் கண்ணதாசன்...

- முன்னாள் அமைச்சர் -
**கவிவேந்தர் கா. வேழவேந்தன், பி.ஏ.பி.எஸ்.**

(நாற்பதாண்டுகட்கு முன்னர் கல்லூரியில் நடந்த கவியரங்கில் "எனக்குப் பிடித்த கவிஞர்" என்ற தலைப்பில் பாடிய கவிதை)

குளிர் தமிழ்க் கண்ண தாசன்...!
கொள்கையில் தமிழின் தாசன்...!
மிளிர் தமிழ்ப் பண்பில் தாசன்...!
மேன்மைசேர் நாட்டின் தாசன்...!
தளர்விலா உழைப்பின் தாசன்...!
தாயகம் உயர்த்தும் தாசன்...!
வளந்தோய்ந்த இலக்கியத்தின்
மாண்பினைப் பெருக்கும் தாசன்...!

புல்லையும் நிமிர வைக்கும்
புழுவுக்கும் வீரமூட்டும்
கல்லையும் பேச வைக்கும்
கவிதைக்குச் சொந்தகாரன்...!
சொல்லாழப் பாடலாலே
சொக்கிட வைப்போன் என்றால்
நல் "விசா லாட்சி" பெற்ற
நம் "முத்து" இவனே என்பேன்...!

வேனிலில் பழுக்கும் மாவே
மெத்தவும் இனிக்கும் என்பார்...!
நானிதை மறுப்பேன் எங்கள்
நறும்புகழ்க் "கண்ணதாசன்"
தேனலாம் தேக்கித் தந்த
சிறந்த "மாங்கனி" சுவைத்தால்
சீனியும் கசக்கும், உண்ட
சிந்தனையே தனிக்கூத்தாடும்...!

மொழி வாழ, நாடு வாழ
முன்னவர் வளர்த்து வைத்தக்
கழிபுகழ் வாழ் தன்னைக்
காணிக்கை யாக்க வந்தான்...!
பழங் "கல்லங்குடி" யென்கின்ற
பைந்தமிழ்ப் பெயரை மாற்றும்
பழி கண்டு "கலைஞ"ரோடு
படைசேர்த்துப் பெரும் போரிட்டாள்...!

பலப்பல "கவிதை" பாடிப்
பசுந்தமிழ் நாட்டோர் நெஞ்சில்
குலப்புகழ் "விதை"யை இட்டான்...!
பலப்பல "புதினம்" ஆக்கிப்
பாழ்நாட்டில் "தினம்" நடக்கும்
நிலையெலாம் உணர வைத்தான்
நெஞ்செலாம் பரிசாய்ப் பெற்றான்...!



## வரவேற்கிறோம்



F.R.C.S. பட்டம் பெற்று 9-1-2000 அன்று தாய்நாடு திரும்பும் சிவகங்கை மாவட்டம் கண்டனூரைச் சேர்ந்த

**டாக்டர். *P.R.* இராமசாமி, *M.B.B.S., M.S.,(Ortho)***

அவர்களை வருக! வருக!! என அன்புடனும் பெருமிதத்துடனும் வரவேற்கிறோம்.

**உறவினர்களும் - நண்பர்களும்**



## கணவன்-மனைவி உறவு

என்றென்றும் மனைவியே கணவனின் உயர்வுக்கு மூலகாரணம்.

சிறந்த கணவன் பால் என்றால் மனைவி சர்க்கரை போல் அவனில் கலந்து அவனை மேம்படுத்தவேண்டும். இதுவே முதனிலை தாம்பத்தியம்.

சில மனைவிகள், பால் போன்ற கணவன்களை டிகாஷன் போல தான் கலந்து நிறம் மாற்றி... சுவை மாற்றிக் கொடுத்து விடுவார்கள். இது இடைநிலை தாம்பத்தியம்.

பால் போன்ற கணவனை தயிர் போன்ற மனைவி கலந்து திரிந்து தயிராகவே மாற்றி விடுவார்கள். அப்போது அவன் தன் முழு இயல்புகளிலும் மாறி விடுகிறான். இது கடைநிலை தாம்பத்தியம்.

ஜெயித்த - வென்ற - பிரமிக்க வைத்த ஆண்களை எடுத்துக்கொண்டு அவர்களின் மனைவிமார்களை நாம் கவனித்தால் அவர்கள் இங்கே முதலில் சொல்லப்பட்ட சர்க்கரைக்கு ஒப்பாவார்கள்.

- ***அரிமா ஹரல்ஸ் நாராயணன்,*** கண்டவராயன்பட்டி (கோவை)



# மருத்துவப்பகுதி

டாக்டர். எஸ். சிவசுப்பிரமணியன்,
M.S. F.I.C.S. F.A.C.S.,



## கர்ப்பப்பை – மகளிர் மட்டும்

கேள்வி: பிறப்பு உறுப்புக்களின் வளர்ச்சியில் ஏற்படும் மாறுபாடுகளின் விளைவுகள் என்ன என்று கூறுங்கள் டாக்டர்...?

பதில்: சூலகம், சினைக்குழாய், கர்ப்பப்பை, யோனி இந்த உறுப்புக்களில் எதில் குறைபாடு இருந்தாலும் மாதவிடாய் பழக்கத்திலோ அல்லது கருத்தரித்தலிலோ இடையூறுகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. யோனி வாயில் சவ்வு ஒன்று சிறிய துவாரத்துடன் இயற்கையில் இருக்கும் (Hymen) இது பாதிக்கப்படாமல் இருந்தால்தான் கற்புடைய பெண் (Verginity) என்று கருதி வந்த காலம் இருந்தது. ஆனால் பெண்கள் மிகச் சுறுசுறுப்பாய் ஓடி, ஆடி பல வேலைகளையும் செய்துவரும் இந்தக்காலத்தில், ஓட்டப்பந்தயம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல் போன்ற பல விளையாட்டுப் பந்தயங்களில் ஈடுபடும்போது பள்ளி நாட்களிலேயே இந்த யோனிச்சவ்வு (Hymen) கிழிந்துவிட வாய்ப்புகள் உள்ளன. இந்தச் சவ்வுத்துவாரமே இல்லாமல் ஒரு சிலருக்கு யோனி வாய் அடைபட்டிருக்கும். இதுபோன்று உள்ளவர்களுக்கு (Imperforate Hymen) மாதவிடாய் ஏற்படவே வாய்ப்பு இல்லை. மாதவிடாய் சமயத்தில் வெளியேறும் சவ்வும், உதிரமும் உடலை விட்டு வெளியேற வாய்ப்பு இன்றி யோனிக்கு உள்ளேயே தேங்கிக் கிடக்கும். (Imperforate Hymen) பின் ஒருநாள் அதிக அடிவயிற்று வலியுடன் அவதிப்படுவார்கள். டாக்டர்களிடம் காண்பித்தால் இந்தக்குறையைக் கண்டுபிடித்து யோனிவாயில் . கிழித்து உதிரம் வெளியேற, அதனால் வலி குறைய சிகிச்சை அளிப்பார்கள்.

கர்ப்பப்பையே வளர்ச்சியடையாமல் இருந்தாலோ (Uterine Agenisis) அல்லது யோனி இல்லாமலோ (Vaginal Atresia) இருக்கும் பெண்கள் ருதுவாகவே வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள்.


கேள்வி: இதுபோன்ற குறைபாடு உள்ள பெண்களைக் குணப்படுத்த முடியுமா டாக்டர்?

பதில்: புதிதாக யோனியை அறுவை சிகிச்சை செய்து (Artificial Vagina) உண்டாக்கலாம். ஆனால் அவர்கள் குழந்தை பெற வாய்ப்பே கிடையாது.

கேள்வி: கர்ப்பப்பையிலும் பிறவிக்கோளாறுகள் ஏற்படுமா...?

பதில்: ஆம்... நான் முன்கூறியது போன்று கர்ப்பப்பையே இல்லாமல் குழந்தை பிறக்கலாம். அல்லது வளர்ச்சியடையாத கர்ப்பப்பையுடன் பெண்கள் இருக்கிறார்கள். (Hypoplastic Uterus) ஒரு சிலருக்கு கர்ப்பப்பையே பாதியளவு பிளவுபட்டு இருக்கலாம் அல்லது இரண்டு கர்ப்பப்பைகளாக முழுவதும் பிளவுபட்டும் இருக்கலாம்.

கேள்வி: இதுபோன்ற மாறுபட்ட கர்ப்பப்பை உள்ளவர்கள் கருத்தரிக்க வாய்ப்பு உள்ளதா டாக்டர்...?




**இயற்கையான அமைப்பு** *(Normal Structure)*

**பாதி பிளவுபட்ட கர்ப்பப்பை** *(Bicornuate Uterus)*

**முழுவதும் பிளவுபட்ட கர்ப்பப்பை** *(Diadelphic Uterus)*

பதில்: நிச்சயம் கருத்தரிக்க வாய்ப்பு உண்டு. பாதி பிளவுபட்ட கர்ப்பப்பை உள்ளவர்களுக்கு குழந்தை குறுக்குவாட்டில் இருந்தால் அறுவை சிகிச்சையின் மூலம் குழந்தையை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

முழுவதும் பிளவுபட்ட (இரண்டு கர்ப்பப்பை) கர்ப்பப்பை உடையவர்கள் ஒரு கர்ப்பப்பையின் மூலம் எனக்குத் தெரிந்து 4 குழந்தைகள் இயற்கையாக பெற்று எடுத்தவர்கள் இருக்கிறார்கள். மற்றொரு கர்ப்பப்பை வேலையின்றி இருப்பதால் அதில் உதிரம் தேங்கி வலி கொடுத்து அறுவை சிகிச்சை செய்து வெளியேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

**கேள்வி: சினைக்குழாயிலும் பிறவியிலேயே வேறுபாடுகள் உள்ளனவா டாக்டர்_?**

பதில்: ஆம். ஒரு சிலருக்கு சினைக்குழாய் குழாய் போன்று இல்லாமல் பிறக்கலாம். (Fallopian-Cord) அல்லது சினைக்குழாயே இல்லாமலும் பிறக்கலாம். (Fallopian Atresia) இயற்கையாக நல்ல நிலையில் பிறந்த சினைக்குழாயில் பின்பு அடைப்புகள் ஏற்படலாம்.

**கேள்வி: சினைக்குழாய் அடைப்பு ஏற்பட முக்கிய காரணங்கள் என்ன_?**

பதில்: பல காரணங்கள் உள்ளன.

1. முதற்காரணம் ஜனனப்பாதை, கர்ப்பப்பை, சினைக்குழாய் இவற்றில் ஏற்படும் தொற்றுகள் (Infection) (Vaginitis, Endometritis, Salpingitis)

2. நம் நாட்டில் காசநோய்தான் சினைக்குழாய் அடைப்பின் முக்கிய காரணம் (Tuberculous Salpingitis) வயிற்றின் உள் உள்ள சிறுகுடல், பெருங்குடல், நிணநீர்க்கட்டிகள் போன்றவற்றைத் தாக்கும் காசநோய் சினைக்குழாயையும் தாக்கி அடைப்பு (Tuberculous Strictures) ஏற்படுத்துகிறது.

3. குழந்தை இல்லை என்ற ஏக்கத்தில் டாக்டர்களிடம் அடிக்கடி காட்ட அவர்களில் சிலர் கர்ப்பப்பையில் அடைசல் இருக்கிறது என்று எண்ணி அதனை சுத்தம் செய்தால், குறிப்பாக அடிக்கடி சுத்தம் செய்தால் (Frequent D&C) சினைக்குழாய் அடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

4. கருக்கலைப்பு செய்வது மற்றும் ஒரு காரணம். (MTP)

5. அருகில் உள்ள உறுப்புக்களின் நோய்கள் சினைக்குழாயையும் பாதித்து அடைப்பு ஏற்படலாம். குறிப்பாக சூலகத்தில் கட்டியோ, தொற்றோ ஏற்பட்டால் சினைக்குழாயையும் பாதித்து அடைப்பு ஏற்படலாம் (Tubo Ovarian Mass)

6. சினைக்குழாயிலேயே நீர்த்தேக்கம் ஏற்பட்டு முட்டை போன்று உண்டாகலாம். (Salpingial Cyst) அல்லது சினைக்குழாயின் நுனியில் ஏற்படும் முட்டைக்கட்டி (Fimbrial Cyst) பெரிதாக இருந்தால் சினைக்குழாயையே அடைக்கலாம்.

7. வயிற்றின் உள் உள்ள மற்ற உறுப்புக்களின் நோயினால் சினைக்குழாய் அடைப்பு ஏற்படலாம். உதாரணமாக குடல்வால் சீழ்க்கட்டி (Appendicular Abscess) சிறுகுடல் டைபாய்டு துவாரம் (Typhoid Perforation of Intestine) அல்சர் துவாரம் (Ulcer Perforation) போன்ற நோய்களால் வயிற்றின் உள்குடல், குடற்கொழுப்பு எல்லாம் சேர்ந்து ஒட்டிக்கொண்டு சினைக்குழாயையும் அடைக்கலாம்.

சூலகத்தில் ஏற்படும் நோய்கள் பற்றி அடுத்த இதழில் கூறுகிறேன்...

# காலத்துக்கேற்ற மாற்றம்...!

**பொறிஞர். வீ. முருகேசன், *D.M.E., M.I.S.T.E.,***
**முதுநிலை விரிவுரையாளர்,அமைப்பியல், பழனி.**

நகரத்தார்குரல் '99 இதழில் வெளியான நெருக்கடியில் "நகரத்தார் சமூகம்" என்ற தலைப்பிலிமைந்த கட்டுரையினை படித்ததால் என் உள்ள வெளிப்பாடுகளே இக்கட்டுரை...

நீண்ட நாட்களுக்கு முன்பு காவேரிப்பூம்பட்டினத்தில் பேசப்பட்ட பேச்சின் சாரம் இதேபோல நகரத்தார்குரலில் அப்போது பிரசுரமாகி இருந்தது. அதில் செட்டிய வீட்டுப் பெண்களுக்கு மறுமணம் அவசியமே இல்லை என்று ஏன் முன்னோர்கள் வைத்தார்கள் என்றால் தேவர் இனத்தவர் போல நம் இனத்தவர் போரிட போர்க்களம் செல்வதில்லை. போருக்குப் செல்பவரே உயிரிழப்பர். ஆகவே அந்த சமூகத்துப் பெண்களுக்கு மறுதிருமணம் சரியாய் இருக்கலாம். நாம் வணிகர். நம் இனத்தில் சிறுவயதில் கணவனை இழப்பது என்பது வெகு அபூர்வம். அபூர்வமான விஷயத்தை கணக்கில் எடுக்கலாகாது. ஆகவே நம் இனப்பெண்களுக்கு இரண்டாம் திருமணம் அவசியமே இல்லை என்று சொல்லப்பட்டிருந்தது.

இது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுகிறார்கள் என்பது யாருக்கும் புரியும். அன்றைக்கு நம் இனத்தவர் போருக்கு போகவில்லை தான். அதனால் விதவைத் திருமணம் என்பது இல்லாமல் வைத்தார்கள் என்பதை சரி என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் தற்போது இன்றைய நிலை என்ன? என்பது தானே கேள்வி... அதை விட்டுவிட்டு பழங்காலத்தையே பேசிக் கொண்டிருப்பதில் பலன் என்ன?

ஒரு பெண் 24 வயதில் ரயில் விபத்தில் கணவனை இழந்தால் அவள் ஆசாபாசங்கள் அடங்கிப்போய்விட வேண்டுமென்று சொல்வது என்ன நியாயம். கண்ணகியாய், காரைக்கால் அம்மையாராய் உயர்ந்துவிடு என்கிற உபதேசம் சரியா? அவள் சாதாரண பெண்ணாகவே நம் இனத்தில் சம்மதப்படுபவனை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்துவிட்டுப் போவதில் யாருக்கு என்ன இழிவு... இழப்பு...

அறுபத்தி ஐந்து வயது முதியவருக்கு பெண் தேவை என்று நம் இனப் பத்திரிகைகளிலே (நகரத்தார்குரல் அல்ல) விளம்பரம் வருகிறது. கேட்டால் வயதான காலத்தில்தான் ஒருவனுக்கு துணை அவசியம் என்கிறார்கள். இவ்வளவுக்கும் நாலு மகன், நாலு மகள், நாற்பது பேரன், பேத்திகளுடன் இருப்பவருக்கே இவர்கள் எல்லாம் துணை இல்லை வயதான காலத்திலும் துணை என்று மனைவி மட்டுமே என்கிறார்கள்.

சிறுவயதிலேயே கணவனை இழந்தோ, பிரிந்தோ வாழும் பெண்ணுக்கு குழந்தையும் இல்லை என்கிறநிலையில் வயதான பெற்றோர்களும் இறந்து போகிறபோது அவளுக்கு யார் துணை? அதன்பின் அநாதையாகத்தான் அவள் வாழ வேண்டுமா? அநாதையாகவே அவள் சாகவேண்டுமா? வாலிப வயதிலேயே மறுமணம் முடித்து குழந்தைகளைப் பெற்று ஏதோ ஒரு விதத்தில் மரியாதையாய் அவள் வாழ்ந்து நிம்மதியாய் சாவதில் இந்த சமூகத்திற்கு என்ன இழப்பு வந்துவிடப்

போகிறதோ தெரியவில்லை.

அறுத்துக் கட்டும் ஜாதி. அறுத்துக் கட்டும் ஜாதியா என்று அங்கலாய்க்கிறார்கள். ஏன் இந்த அங்கலாய்ப்பு. அறுத்துக் கட்டும் ஜாதிதான். இனி அப்படி யாரேனும் சொன்னால் அது ஒன்றும் நம்மை சுட்டெறித்துவிடாது.

இதற்காக போய் ஏசு என்ன சொன்னார் என்கிற ஆராய்ச்சியெல்லாம் தேவை இல்லாதது. அப்படியே பழைய பஞ்சாங்கங்களை புரட்டித்தான் ஆகவேண்டும். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்றார் நபிகள் நாயகம் அவர்கள். விதவை கதீஜாவை மணந்து கொண்டது ஏன் என்று ஆராய்ச்சி செய்யலாமே.

முதுமையிலா நம் இன தம்பதிகளுக்குள் பிரிவு ஏற்படுகிறது. இல்லையே. திருமணம் ஆகுமுன் இருந்த அழகு தற்போது அழிந்து விட்டது என்றா பிரிகிறார்கள். இல்லையே... மனக்கசப்பும், ஏதோ ஒரு வகையில் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்கிற உணர்வும், விட்டுக்கொடுத்து வாழ முடியாமல் போன சூழ்நிலைகளும்தானே பிரிவுக்கு காரணங்கள் ஆகின்றன. பொருளாதாரத்தில் பெண் சுயபலம் பெற்றும், இக்கால கட்டத்தில் கதி இல்லை என்பதெல்லாம் சரி இல்லை என்றால் தவறாகுமா...?

'கதி' இல்லை என்பதற்கு இனி வேறு யாராவது சொல்லலாம் பொருளாதாரம் பற்றி மட்டுமா அங்கே குறிப்பிடப்பட்டது. மொத்த ஆதரவும் கணவன்தானே என்பதுதானே அர்த்தம் எனலாம். அவர்களுக்கும் நான் சொல்வது இங்கே கணவனை பிரிந்து வந்துவிட்ட பெண்ணுக்கு அந்த மொத்த ஆதரவு என்று எதை எதையெல்லாம் சொல்லுகிறார்களோ அவையெல்லாம் கிடைக்கத்தான் மறுமணம் என்பதே என் கருத்து.

இரண்டாம் திருமணத்தால் மாற்றாந் தந்தையிடம் வளரும் பிள்ளை மனோரீதியாக பாழ்படும் என்கிறார்கள். மாற்றாந்தாயிடம் வளரும் பிள்ளைகளை நன்றாக வளர்த்து விடலாம் என்கிற துணிவு இருக்கும்போது பொருளாதாரத்தில் முன்னேறிய பெண் தன் பிள்ளை சிறப்பாய் வளர மாற்றாந்தந்தையே முழுமையாக நம்பி இருக்கத் தேவையே இல்லையே. பெற்றவர்களின் ஓயாத தினசரி சண்டையினூடே வளரும் பிள்ளைகளின் மனதில் ஏற்படும் பாதிப்பை விட இது ஒருக்காலும்கூட இருந்து விட முடியாதே.

சுவீகார பிள்ளைகள் சொந்த தாய் தகப்பனை பிரிந்து முற்றிலும் புதிதாய் இருவரை சேர்ந்து வளரும்போது ஏற்படாத தாக்கமா சொந்தப் பெற்றோர்களில் ஒருவருடனும் அயலார் ஒருவருடனும் இருந்து வளரும்போது ஏற்படப் போகிறது.

திருமணமானால் கோயில் மாலை வருமா என்கிற புதிய கேள்வி நம்மை திகைக்க வைக்கிறது.

கோயில் மாலை வராது. உன் திருமணத்திற்கு சமூக அங்கீகாரம் இல்லை என்று சொன்னால் நம் இனப் பையனையே மீண்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணமே உடைய அந்தப் பெண்ணுக்கு நம் இனப் பையன் என்கிற எண்ணம்தானே அற்றுப்போகும்.

ஏற்கனவே மாமியார் சாமானுக்கு பணம் கொடுக்கமுடியாமல் கல்யாணம் ஆகுமோ ஆகாதோ என்று இருந்து இருந்து பார்த்துவிட்டு எம்மதமும் சம்மதம் என்று ஊருக்கு இரண்டு பேர்களாவது மனசு மாறி சென்றாகிவிட்டது என்றே நினைக்கிறேன்.

இனி இவர்களையும் கண்ணகியாய் இருங்கள். காரைக்கால் அம்மையாராய் மாறுங்கள் என்று உபதேசித்துக் கொண்டு கோயில் மாலை வராது என்றால் நிச்சயம் நம் இனம் வளரவே வளராது.

'மனைவி அமைவதெல்லாம் இறைவன்

கொடுத்த வரம்... அப்படி நல்ல மனைவி அமையாத ஆண் வாழ்க்கையில் பிளவுபட்டு போகும்போது அவன் என்ன செய்வது என்பது தற்போது விடை காணமுடியாத கேள்விக்குறியாகி இருப்பது இன்றைய நிலையில் எத்தனை பேர்களுக்கு புரிந்துள்ளதோ தெரியவில்லை.

தற்காலத்தில் தள்ளி வைத்துவிட்டேன். இரண்டாம் திருமணம் செய்து கொண்டு விட்டேன் என்றெல்லாம் எந்த ஆணும் செயலில் இறங்கிவிட முடியாது. சட்டத்தால் கடுமையாக அவர்களை தண்டித்து விடும் வாய்ப்பு இருக்கிறது.

குணக்கேடான கணவனிடம் பெண் வாழ்வதை விட குணக்கேடான பெண்ணிடம் ஆண் வாழ்வது தற்காலத்தில் அதிபயங்கர விஷயம். குணக்கேடான பெண் கணவனை தன் அநியாய நிர்ப்பந்தங்களுக்கு உட்படுத்த அவளுக்கு, தற்காலத்தில் வழங்கப்பட்டுள்ள சட்ட சௌகரியங்களில் எதையாவது ஒன்றை எடுத்து ஆயுதமாக்கி அவன்மீது வீசினாலே போதும் அவன் அதோ கதிதான்.

ஆகவே விவாகரத்து என்பது தற்காலத்திலும் சரி, வருங்காலத்திலும் சரி பரவலாய் நடைபெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே ஆகிவிட்டது.

இந்தநிலையில் காலத்துக்கு ஏற்ற மாற்றங்களை செய்து கொள்ளாமல் ஆயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன்பு இருந்தபடியே இனியும் இருக்கவேண்டும். கோயில் மாலை வராது, பங்காளிகள் பணம் எழுதமாட்டார்கள் என்றெல்லாம் கட்டுப்பாடுகளை வைத்து இறுக்கிக் கொண்டிருந்தால் கோயில் மாலையும் வேண்டாம், பங்காளிகள் பணம் எழுதவும் வேண்டாம் என் வழியில் நான் போகிறேன் என் வாழ்வே சீரழியும்போது நான் எதைப்பற்றி கவலைப்படவேண்டும் என்ற மணவாழ்க்கையில் பாதிக்கப்பட்ட நம் இனப் பெண் சொல்வாளா? (சொல்வார்களா?) இல்லை, ஆயிரத்து ஐநூறு வருடப் பாரம்பரியத்தில் இதுவரை எந்த மாற்றமுமே ஏற்படவில்லை. இனிமேலும் வேண்டாம் என்று முடிவெடுத்து முடங்குவார்களா? அல்லது எந்தப் பேச்சுக்கும் இடம் இல்லை. கோயில் மாலை வரவேண்டும், பங்காளிகள் பணம் எழுதுதல் வேண்டும், எங்களில் யாருக்கேனும் இரண்டாம் திருமணம் என்றால் அதற்கு சமூகத்தின் முழு அங்கீகாரமும் கட்டாயம் வேண்டும் என்று போராடியும் ஜெயிக்கும் குணம் கொள்வார்களா? என்பதை ஆண்களாகிய நாம் இனி பேசமுடியாது. நம் இனச் சகோதரிகளில் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளவர்கள்தான் சொல்ல வேண்டும்.

மறுமணம் செய்து கொள்ள விரும்புகிறவர்கள் மறுமண எதிர்ப்பாளரைத் தான் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்பதை ஏன் கட்டாயப்படுத்தக்கூடாது என்று நம் இனச் சிந்தனையாளர்கள் சிந்தித்தால், அந்த சிந்தனை எவ்வளவு ஆரோக்கியமானதாக இருக்கும்... எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்... அதனால் தற்போது உள்ள பல பிரச்சனைகள்கூட தானாய் விலகுமே என்பது நம்மினத்தின் பலருக்கு பரவலான கருத்தாய் இந்த நேரத்தில் இருக்கும். இருக்கவேண்டும் என்பதே என் எண்ணம்... நம்பிக்கை... வேண்டுகோள்...



## ஆசிரியர்-துணை ஆசிரியராக மகாகவி...

**ம**காகவி பாரதியார் மதுரை சேதுபதி உயர்நிலைபள்ளியில் 1904ஆம் வருடம் ரூ. 17-50 சம்பளத்தில் நான்கு மாதம் ஆசிரியராக பணியாற்றினார். பிறகு விலகி அதே ஆண்டு நவம்பர் மாதம் சென்னையில் சுதேசமித்திரன் நாளிதழில் துணை ஆசிரியராக பணியில் அமர்ந்தார்.

# பட்டம் வழங்கும் விழா



"பழம் நீ" பாதயாத்திரைக்குழுவின் "பழம் நீ" அறக்கட்டளையின் சார்பில் கண்டரமாணிக்கம் சிநா. நாச்சியப்பா அவர்களுக்கு "அருள்நெறித்தொண்டர்" என்ற பட்டம் வழங்கி பாராட்டப்பெற்றது. பட்டத்தினை அறநெறியண்ணல் நாராயணன் செட்டியார் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

# விமானம் ஏற்றும் விநாயகர்...



பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் ஆலயத்தின் கிழக்கு வாயிலில் உள்ளது இந்த மருதமரத்து விநாயகர். இந்த விநாயகரின் மகிமை என்ன தெரியுமா...?

வெளிநாட்டிற்கு வாணிபத்திற்கோ அல்லது அங்கு பணியாற்றுவதற்கோ செல்லும் திட்டம் இருந்தால் இந்த மருதமரத்து விநாயகரை வலம் வரலாம். இவரை வழிபட்டு வலம் வந்தால் வெளிநாடு செல்லும் வரம் தந்து பக்தர்களை வெளிநாட்டிற்கு விமானம் ஏற்றுவாராம். பலபேரின் இந்த நம்பிக்கையை இந்த விநாயகர் நிறைவேற்றி வருவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# உங்கள் குரல்

**மிகமிக நன்று...**

கொங்குவேளாளர் நிறைந்துள்ள கோயம்புத்தூரில், கொடிகட்டிப் பறக்கும் கோனாபட்டு SMRS. அவர்களின் சேவை கோவை மட்டுமின்றி, உலகளவும் பிரசித்தம் நல்லமனம் கொண்டோரை தேடிப்பிடித்து பேட்டியெடுக்கும் 'நகரத்தார்குரல்' மிகமிக நன்றாக வந்திருந்தது.

**- டாக்டர் என்.என். கண்ணப்பன்,** மதுரை

**சிறப்பு**

ஒரு சமூகத்தை மற்றும் சார்ந்து இல்லாமல் அனைத்து சமூக மக்களும் போற்றும்வண்ணம் அழகிய முறையில் வெளி வருவது மிகவும் சிறப்பு. நானும் என் திராவிட இயக்க நினைவுகளும் தொடர்ந்து வர விரும்புகிறேன்.

**- எஸ். சங்கையா,** மதுரை

**பெருமை...!**

பெருமைக்குரிய நகரத்தார், தென்கச்சியாரின் தொடர், கு. ஞான சம்பந்தன் தொடர் என்றும் இஸ்லாமியரின் வால்மீகி போன்ற கட்டுரைகள் அற்புதம். நகரத்தார்குரல் கையிலிருந்தால் அது ஒரு பெருமை. வாங்க ஆச்சி சமைக்கலாம் அருமை...

**- விசாலாட்சி,** திருமயம்.

**அற்புதம்...!**

ஜனவரி இதழில் புதிய ஆயிரத்தாண்டில் தங்களின் செய்திகள் அற்புதம்... பொட்டு குத்தினாற்போல் உள்ளது.

**- சபாரத்னம்,** சேலம்.

**சுகப்பிரசவம்...!**

டாக்டர். சிவசுப்பிரமணியத்தின் மருத்துவபகுதி சூப்பர்... அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் அதிகமாகிவிட்ட இந்த காலத்தில் சுகப்பிரசவம் அடைய கர்ப்பம் தரித்திருக்கும் காலங்களில் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை கொஞ்சம் விளக்குங்கள் டாக்டர்...

**- அக்னிபுத்திரன்,** மதுரை.

**குரல் அசத்தல்...!**

நம் நகரத்தார்களுக்கு செல்வமும், செல்வாக்கும் கிடைத்தது எப்படி என்பதை தங்கள் பெருமைக்குரிய நகரத்தார் படித்தேன். அறிந்தேன். விநோதசிற்பம், வெற்றியின் இரகசியம், காணக்கிடைக்காத கவியரசரின் காட்சி என குரல் அசத்தல்தான்...

**- அரிமளம் முரு. பழனியப்பன்,** காரைக்குடி.

**வாலிபம்!**

உலகம் சுற்றிய வாலிபர் கோனாபட்டு எஸ்எம்.ஆர்.எஸ். சுப்பையா செட்டியார் அவர்கள் வயதானில் தொண்டிலும், தோற்றத்திலும் இன்னும் வாலிபம் நிறைந்துள்ளது.

**- எஸ். இராமநாதன்,** மதுரை.

**கற்றேன்...!**

நகரத்தார்குரல் வாங்க ஆச்சி சமைக்கலாம் பகுதி படித்து பாசிப்பருப்பு பணியாரம் செய்வதை கற்றுக் கொண்டேன். குரலுக்கு நன்றி. எங்கள் கோவை பெருந்தலைவர் பேட்டி சிறப்பு...

**- முத்துமீனாள்,** கோவை.

**வெளிப்பாடு...!**

ஆயிரத்தாண்டை அழைப்போம் கவிதை பலர் உள்ளத்தின் வெளிப்பாட்டை உணர்த்துவதாயிருந்தது...

**- எம். தினேஷ்,** மதுரை

**பயனுண்டு...!**

சொன்னதும் கேட்டதும் புதிய பகுதி அருமை. குரல் செய்திகளை மொண்டு தருகிறது. வாசகர்களுக்கு பயனுமுண்டு.

**- கரு. வெங்கடாசலம்,** சென்னை.

**மறத்தமிழர்...!**

அறமனச்செம்மல்' என்ற விருதினை அன்புடன் ஏற்றுக் கொண்ட கோனாபட்டு மறத்தமிழர் சுப்பையா செட்டியாரின் நெடிய தோற்றத்தை நேரில் கண்டேன். அவரின் பேட்டி சிறப்புடையதாயிருந்தது.

**- சுப. உடையப்பன்,** புதுவயல்.



# வாங்க ஆச்சி... சமைக்கலாம்!

விசாலாட்சி, சென்னை

## பால் கொழுக்கட்டை

**தேவையான பொருட்கள்:**

| | | | |
|---|---|---|---|
| பச்சரிசி | ஒரு ஆழாக்கு | தேங்காய் | ஒன்று |
| புழுங்கலரிசி | 3 ஆழாக்கு | ஏலக்காய்தூள் | ஒரு தேக்கரண்டி |
| வெல்லம் | அரை கிலோ | பாசிப்பருப்பு | அரை ஆழாக்கு |

**செய்முறை:**

அரிசியை ஊறவைத்து ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து, சிறிதளவு தண்ணீர் சேர்த்துக் கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். தேங்காயைத் துருவிக் கொள்ளவும். பாசிப்பருப்பை வேகவைத்துக் கொள்ளவும். ஆட்டிய மாவை ஒரு அங்குலநீளத்திற்கு சிறு உருண்டைகளாக உருட்டி பேப்பரில் உலர விடவும். வெல்லத்துடன் 8 டம்ளர் தண்ணீர் சேர்த்துக் கரைய விடவும். வெல்லம் கரைந்தவுடன் வடிகட்டி பாகை அடுப்பில் வைக்கவும். பாகு கொதித்துக் கொண்டிருக்கும்போதே உருட்டி வைத்துள்ள கொழுக்கட்டைகளை அதில் போடவும். தேங்காய் துருவலையும், பாசிப்பருப்பையும், ஏலக்காய்த்தூளையும் வெல்லப்பாகில் சேர்க்கவும். கொழுக்கட்டைகள் வெந்தவுடன் அடுப்பில் இருந்து இறக்கவும்.

## வெள்ளைப் பணியாரம்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பச்சரிசி | 1 ஆழாக்கு (தலைதட்டி) |
| உளுந்தம்பருப்பு | அரிசிக்கு மேல் கோபுரமாக |
| உப்பு | தேவையான அளவு |
| எண்ணெய் | கால் கிலோ |

**செய்முறை:**

1. அரிசியையும், உளுந்தம் பருப்பையும் ஊறவைத்து நைசாக உப்புச் சேர்த்து ஆட்டிக் கொள்ளவும்.
2. மாவை பஜ்ஜிமா பதத்திற்கு தண்ணீர் சேர்த்து கரைத்துக் கொள்ளவும்.
3. வாணலியில் எண்ணெய் ஊற்றி, காயவைத்து மாவை வட்டமான அகலமான கரண்டியால் எடுத்து ஊற்றவும்.
4. பணியாரம் மேலே எழும்பி வந்தவுடன் மறுபுறம் திருப்பி உடனே எடுத்து விடவும்.
5. மாவு மிகவும் கெட்டியாக இருந்தால் பணியாரத்தின் நடுவில் மாவாக இருக்கும். அப்போது சிறிது தண்ணீர் சேர்த்துக் கரைத்துக் கொள்ளவும்.

அடுத்த இதழில்...

# முதலாமாண்டு நினைவாஞ்சலி

தோற்றம்:
2-4-1944



மறைவு:
18-2-1999

என்றும் எங்கள் நினைவில் வாழும்

## SE.SV. நாராயணன் செட்டியார், B.A.M.L.,

நற்றவத்தால் நேமத்தான்பட்டி தோன்றி
நாடெல்லாம் அரிமாவில் புகழைப்பெற்று
சுற்றமுடன் உறவினர்கள் போற்றும்வண்ணம்
தொடர்ந்து பலஅமைப்புகளில் தொண்டுசெய்து
நேர்மையுடன் நடுநிலைமைக்கொள்கை காத்து
நிதம்வாழ்ந்து கண்தானம்செய்து என்றும்
வெற்றிக்கு வழிகாட்டும் தெய்வமானீர்!
விளக்கேற்றி உன்நினைவால் வாழ்வோம்! வெல்வோம்!

**நினைவில் வாழும் உங்களை**
**மனையில் வணங்கும் உள்ளங்கள்**

| | | |
|---|---|---|
| திருமதி. என். வசந்தா | - | மனைவி |
| என். சிவப்பிரகாசம் | - | மகன் |
| எஸ். விசாலாட்சி | - | மருமகள் |
| பிஆர். தேவி | - | மகள் |
| கேஎம். பெரியகருப்பன் | - | மருமகன் |
| சி. மீனா | - | மகள் |
| எல்.கே. சொக்கலிங்கம் | - | மருமகன் |

மற்றும் பேரன்–பேத்திகள்



**செ**ன்னை தி.நகரில் உள்ள கவியரசர் கண்ணதாசனுக்கு எழுப்பியுள்ள வானளாவிய முழு உருவச்சிலை இது...

## கவியரசர் குடும்பத்தினருக்கு ஒரு வேண்டுகோள்...



**க**வியரசர் கண்ணதாசன் பிறந்த இல்லம். சிறுகூடற்பட்டியில் உள்ள இந்த இல்லம் பாழடைந்தும், கருவேலமுட்கள் படர்ந்தும் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. கவியரசு கண்ணதாசன் அறக்கட்டளை ஒன்று நிறுவி, அவர் பிறந்த இந்த இல்லத்தை அவரின் நினைவிடமாக, புதிய கட்டிடமாகவும், நூல்நிலையமாகவும் அமைத்திட நானும் கவியரசரின்பால் அன்பும் மரியாதையும் கொண்டவர்களும் சேர்ந்து ஏற்பாடு செய்கிறோம். மற்ற நகரத்தார்களும் உதவுவார்கள் என அறிகிறேன். கவியரசரின் குடும்பத்தினர்கள், இந்த இல்லத்தை தருவார்களா...? தந்து உதவினால் தமிழர்களின் நெஞ்சங்களில் இன்றும் வாழும் அந்தக்கவிஞனுக்கு நாம் செலுத்துகின்ற தூய்மையான அஞ்சலி என கருதுகிறேன்...

**- வி.என். சிதம்பரம்**



கவியரசு கண்ணதாசன் பிறந்த சிறுகூடற்பட்டியில் உள்ள ஸ்ரீ மலையரசியம்மன் ஆலயம் புத்தருக்கு ஞானோதயம் தந்த போதிமரம் போன்று. கவியரசுக்கு இந்த ஆலயத்தில்தான் கவிபாடும் ஆற்றல் பிறந்ததாம். தனது ஓய்வு நேரங்களில் கவியரசர் இக்கோயிலில்தான் வந்து படுப்பாராம். ஸ்ரீ மலையரசியம்மன் கவியரசுக்கு கவியாற்றல் வழங்கிய தேவியல்லவா...!

# எம்.ஏ. சிதம்பரம் செட்டியார் அவர்கள்
## மறைவு



ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்களின் மூன்றாவது மகனாகப் பிறந்து முத்தான சாதனைகள் புரிந்தவர் **எம்.ஏ. சிதம்பரம் செட்டியார்.** தனது இளமைக்காலத்திலேயே தன் தந்தையாரைப் போலவே புதிய, புதிய சிந்தனைகளால் புதிய புதிய தொழில் தொடங்கி அதில் வெற்றியும் பெற்றவர்கள். பல்லாயிரம் குடும்பங்களின் இல்லங்களின் விளக்கேற்றி வைத்த வித்தகர். விளையாட்டு வீரர் என்பதற்கு சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் ஸ்டேடியமே சாட்சி. அவரை இழந்து வாடும் குடும்பத்திற்கு நகரத்தார்குரல் பத்திரிகை சார்பில் எங்களது நெஞ்சம் நிறைந்த அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்...!

**- ஆசிரியர்**

## மணவிழா...



கீழச்சிவல்பட்டி எம்.எம். பழனியப்பசெட்டியார் புதல்வன் மலையலிங்கம் (எ) சிதம்பரம், வள்ளிக்கண்ணு (எ) ஜெயலட்சுமி இவர்களின் திருமணம் 21-11-99 அன்று சிறப்பாக நடைபெற்றது.

## திருக்குறள் வ(ல)ளம்...!

திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பெற்றது. வள்ளுவர் பிறந்தஊர் கன்னியாகுமரி மாவட்டம் திருநாயர்குறிச்சி என்பதாகும். திருக்குறள் ஜெர்மன், பிராஞ்ச் முதலிய மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பெற்றுள்ளது என்ற பெருமையும் உடையது. அறம், பொருள், இன்பம் என்ற வரிசையில் தர்மத்தைப் பற்றியும் மொத்த கருத்துக்கள் கொண்டது. இந்தியாவின் மறையாக கருதப்பட்டு வரும் இத்திருக்குறளை நகரத்தார்குரலில் தொடர்ந்து எழுதவுள்ளேன். அறநெறி, ஒழுக்கம், வாழும்விதம் பற்றியும் தொகுத்து எழுதியுள்ளேன். வாசகர்கள் படித்து நலமடைய வேண்டுகிறேன்.

- **கானாடுகாத்தான் அரு. சொக்கலிங்கம்,** ஈரோடு.

குறள்: **மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற.**

**பொருள்:** அறம் செய்பவன் தன் மனத்தின்கண் குற்றம் இல்லாதவனாக இருக்கவேண்டும். அது ஒழிந்த சொல்லும் வேடமும் அறம் எனப்படாது. அவை ஆரவாரம் நிரம்பியவை. அதுவே ஒவ்வொருவரும் அறம் செய்ய தன் மனத்தில் எந்தவித (தீயஎண்ணமும்) குற்றமும் இல்லாதவனாக இருக்கவேண்டும்.

- வரும்

## மரம் நடும் விழா

**செ**ன்னை ஸ்ரீ மூகாம்பிகைநகர் திருவேற்காடு பிள்ளையார் மடத்தாங்களில் மரம் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது. பொன்விழா அரிமா சங்கம் (மாவட்டம் 324-ஏ1- வட்டாரம் 5 - வட்டம் 1) மற்றும் உமாசித்ரா எண்டர்பிரைச்ஸ் (ரியல் எஸ்டேட்ஸ், சென்னை) இணைந்து மரம் நடும் விழாவினை ஏற்பாடு செய்திருந்தனர்.

விழாவில் உமாசித்ரா எண்டர்பிரைசஸ் உரிமையாளர் பி. ஜெயச்சந்திரன் வரவேற்றார் தமிழக பால்வளத்துறை அமைச்சர் க. சுந்தரம் முன்னிலை வகித்தார். தேவி கருமாரி அம்மன் கோயில் தவத்திரு. சுவாமி இராமதாசர் நல்லாசி வழங்கினார். விழாவில் விஎன். சிதம்பரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மற்றும் ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கோவிலூர் மடாலய அறிவிப்பு

**கா**ரைக்கால் அம்மையார் குரு பூஜை விழா திருவாலங்காட்டில் எதிர்வரும் மார்ச் மாதம் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. காலையில் அபிஷேகம், பூஜை போன்ற வைபவங்கள் நடைபெறவுள்ளது. மாலையில் பட்டிமண்டபமும், சிறப்புரையும் நிகழ உள்ளது என கோவிலூர் சன்னிதானங்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அங்கு வரும் அன்பர்கள் தங்குவதற்கு இடவசதியும், உணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## நகரத்தார் மகளிர் சங்க தொடக்கவிழா



**பு**துக்கோட்டை நகரத்தார் மகளிர் சங்க தொடக்கவிழா நகரத்தார் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சேலம் நாச்சம்மை காட்டன் மில்ஸ் இணை இயக்குநர் திருமதி. உமாபழனியப்பன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கல்வி, திருமண நிதியுதவி வழங்கினார். விழாவில் ராமாயி என்ற பெண்ணிற்கு திருமண உதவியை அப்பெண்ணின் தாயார் பெறுகிறார். அருகில் மகளிர் சங்கத்தலைவி திருமதி. விஜயலெட்சுமி, செயலாளர் திருமதி விசாலாட்சி, பொருளாளர் திருமதி. வள்ளிக்கண்ணு ஆகியோர் உடன் உள்ளனர். விழாவில் ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# 16ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



## M. கண்ணன், பி.காம்.,

**தோற்றம்: 13-10-1964  மறைவு: 20-1-1984**

**தை**ப்பூசம் என்றவுடன் நின்மறைவால் தவிக்கின்ற எம் மனதை என்னே சொல்ல ஆறுதலாய்ப் பிறந்து எங்கள் துயரும் நீத்தாய் பேறு புகழ் தலமதனில் வீடுகட்டி தம்பிக்கு மணமுடித்து அங்கும் வந்து நீ பிறந்து வளம் பெற்று வாழ்ந்திடவே நெடுநாளாம் ஆசைகளை நிறைவேற்றப்பா...

பிரிவால் தவிக்கும்...

***KR. மெய்யப்பன் - KM. சித்ரா குமரப்பன்***
***M. கமலம்  M. சிதம்பரம் சித்ரா***
***விரையாச்சிலை  M. முத்து, B.E.,***
***CT. மெய்யப்பன் கண்ணா***



வெற்றியூர்

## சோம. மு. முத்தையாசெட்டியார்

**தோற்றம்: 27-10-1922  மறைவு: 22-12-1999**

**கா**ட்சிக் கெளியவராய் கடுஞ்சொல் அல்லராய் பேச்சில் வசியம்செய்தும் பலபணிகள் ஆற்றியும் பண்பிற்கோர் இலக்கணமாய் திகழ்ந்திட்ட பெருமகனார் முத்தய்யா செட்டியார் அவர்கள் 22-12-1999 புதன்கிழமை மாலை சிவபதவி அடைந்திட்டார்...

# அஞ்சலி

பிரிவால் வாடும்

மனைவி  ***சோ.மு. மீனாட்சி ஆச்சி***
மகன் : ***சோ.மு. குமரகுருபரன்***  மருமகள் : ***பானுமதி***
மகள் : ***கரு. கற்பகவல்லி***  மருமகன் : ***கருப்பையா***

## DOMESTIC TERM DEPOSITS.

| | | | |
|---|---|---|---|
| 15 days to 29 days | 5.50% | 1 year and above but less than 2 years | 10.00% |
| 30 days to 60 days | 6.50% | 2 years and above but less than 3 years | 10.50% |
| 61 days to 90 days | 7.50% | 3 years and above | 11.00% |
| 91 days to 180 days | 8.50% | | |
| 181 days to less than one year | 9.50% | | |

## LESS THAN 2 YEARS

Single Deposit over 0.5% over the rate
Rs. 15.00 lakhs prescribed above
The revised interest rate structure for NRE & NRNR Term Deposits

## PRECLOSURE OF TERM DEPOSITS

| | |
|---|---|
| Preclosure of Deposit Within 14 days from the date of Deposit | No interest payable |
| Preclosure between 15th day and 29th day | 2% less than the applicable rate |
| Preclosure after 29 days (ie. 30 days & above) | 1% less than the applicable rate |

## FOR NRI DEPOSITS
## NRE TERM DEPOSITS

| | |
|---|---|
| 6 months to less than 1 year | 9.50% |
| 1 year and and above but less than 2 years | 10.00% |
| 2 years and above but less than 3 years | 10.50% |
| 3 years and above | 11.00% |

## NRNR TERM DEPOSITS

| | |
|---|---|
| 6 months and above upto 3 years | 11.0% |

## DEPOSITS UNDER FCNR (BANK) SCHEME

| Period | Rate of Interest (% p.a.) | | |
|---|---|---|---|
| | GBP | USD | DEM / EURO |
| 1 year to 3 years | 5.75 | 5.75 | 3.25 |

ROC M7 331178/81 dt. 7-5-82

NAGARATHAR KURAL